# செந்தமிழ்

தொகுதி : 95 திருவள்ளுவர் ஆண்டு 2032 மே 2001 பகுதி : 5

திங்கள் இதழ்

மதிப்புறு ஆசிரியர் இரா. அழகுமலை எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

## தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு.நா. குமரன் சேதுபதி | தலைவர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி என்ற அசோக் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை | செயலாளர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | உறுப்பினர் |
| திரு. மா. சங்கர பாண்டியன் | உறுப்பினர் |
| திரு. டாக்டா. ந. சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. கே. கந்தசாமி | உறுப்பினர் |
| திரு. வெ. பழனிச்சாமித்தேவர் | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. க.சி. அகமுடைநம்பி | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் | உறுப்பினர் |
| திரு. அ. சாமிஐயா | உறுப்பினர் |

## செந்தமிழ் ஆசிரியர் குழு

பேரறிஞர். நா. பாலுசாமி
பேரறிஞர். தமிழண்ணல்
பேரறிஞர். செ. கந்தசாமி
டாக்டர். ந. சேதுராமன்
பேரறிஞர். ம.ரா.போ. குருசாமி
பேரறிஞர். கதிர். மகாதேவன்
பேரறிஞர். கு. துரைராசு
பேரறிஞர். அ.அ. மணவாளன்
பெரும் புலவர். இரா. இளங்குமரன்
பேரறிஞர். அ. தட்சிணாமூர்த்தி
பேரறிஞர். எஸ்.எம். கமால்
பேரறிஞர். ஈ.கி. இராமசாமி
பேரறிஞர். சே. அரிராமநாதன்
பேரறிஞர். அ.மா. பரிமணம்
திரு. வே. திருவரங்கராசன்

# செந்தமிழ்

திங்கள் இதழ்

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| வாணாள் கட்டணம் | ரூ. 500 | ரூ. 2000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |


மதிப்புறு ஆசிரியர் :

**இரா. அழகுமலை** எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

# பொருளடக்கம்


1. இறையியல் மனம்
   க.சி. அகமுடை நம்பி .... 149

2. சுவடிகளில் அகத்தியர் நூல்கள்
   மொ. மருதமுத்து .... 164

3. மழலையர் நாடகம்
   தி. ரமா .... 174

4. கஜேந்திரன் மோட்சம்
   பேராசிரியர் ந. சுப்பிரமணியன் .... 180

5. குறிஞ்சிச் சிந்தனை
   அம்பூர், புலவர். சி. பாண்டுரங்கன் .... 183

# இறையியல் மனம்

- க.சி. அகமுடை நம்பி

இறையியல் மனம் அல்லது சமயமனம் (Religious mind) என்பது குறித்து ஆராய்ந்து பார்ப்பது இன்றைய உலகில் பயனுடைய செயலாகத் தோன்றுகிறது. நம்மில் பெரும்பாலோர் ஏதேனும் ஒரு சமயத்தைச் சார்ந்தவர்களாக இருந்து வருகிறோம். ஒவ்வொருவரும் குறிப்பிட்ட ஒரு சமுதாயத்தைச் சார்ந்திருப்பதும் அதிலே பற்று வைத்திருப்பதும் மனித சமுதாயத்தைப் பிரித்துவைக்கின்ற செயல் முறையாகும்.

ஒரு குறிப்பிட்ட சமயச்சார்புக்கும், இறையியல் மனத்துக்கும் இன்றைய நிலையில் எந்தத்தொடர்பும் இல்லை. சமயப் பற்றுள்ளவர்களை இறையியல் மனம் உடையவர்கள் என்று கருத முடியாது.

*வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்*
*தெய்வத்துள் வைக்கப் படும்* (குறள் 50)

என்றவாறு, இறையியல் வாழ்க்கையை நமக்குக் காண்பிக்கின்ற வள்ளுவர் பெருந்தகையும், கடந்த இருபதாம் நூற்றாண்டில் இறையியல் வாழ்வின் சிறப்பை உலகுக்குப் போதித்துச்சென்ற ஜே. கிருஷ்ணமூர்த்தியும் எந்த ஒரு சமயத்தையும் சாராதவர்கள் என்பதையும் மக்களுக்கு இவர்கள் எந்த ஒரு குறிப்பிட்ட சமயத்தையும் சுட்டிக்காண்பிக்கவில்லை என்பதையும், இறையியல் வாழ்வின் நுணுக்கங்களைப் புரிந்துகொள்ள விரும்புவோர் அனைவரும் தம் மனத்தில் இருத்திக்கொள்ளவேண்டும். இருமை வகை தெரிந்து இவ்வுலகில் அறம் வளர்த்த இச்சான்றோர் இருவரின் நிறைமொழிகள் சமய உலகுக்கு என்றென்றும் வழிகாட்டி நிற்கும் கலங்கரை விளக்குகளாம்.

1965 - ஆம் ஆண்டு சனவரி 6ஆம் நாள் சென்னையில் ஜே.கிருஷ்ணமூர்த்தி வழங்கிய கருத்துரை, இறையியல் வாழ்வைப்பற்றிய விளக்கவுரையாக அமைந்தது. அவ்வுரையில் வெளிப்பட்ட கருத்துக்களையும், வள்ளுவரின் குறுகத்தறித்த

குறள்களையும் ஒருசேர ஆராய்ந்து பார்த்து இறையியல் மனத்தைப் புரிந்து கொள்ள முயல்வோம்.

## மனித இனத்தின் தெய்வ வழிபாடு

மானுட நூலோர் கூறுகின்றபடி இரண்டு மில்லியன் ஆண்டுகளாக மனிதன் நிலையற்ற தனது உலகியல் வாழ்வுக்கு மாறாக நிலையான ஒன்றைத் தேடுகின்ற முயற்சிகளில் தெய்வத்தையும், தெய்வீகத்தையும் படைத்தவாறு இருந்து வந்தான்.

தன்னுடைய சொந்த உருவத்துக்கேற்பவும், கற்பனைக் கேற்பவும், தன்னுடைய குறுகிய எல்லைக்கேற்பவும், அச்சங்கள், வேதனைகள், நம்பிக்கைகள் போன்றவற்றுக்கேற்பவும் பல உருவங்களையும், குறியீடுகளையும் உருவாக்கியவண்ணம் மனிதன் இருந்து வந்துள்ளான். உருவத்தைப் புனைந்து உருவாக்கி, அதனை வணங்கத் தொடங்கினான். மரணத்திலிருந்தும், வானத்தின் தாக்குதல்களிலிருந்தும் தனக்கொரு பாதுகாப்பைக் காணவேண்டி, அந்த உருவத்திடம் தவறாது சென்றுவந்தான். பூசனைகள் செய்து வணங்கி வந்தான்.

இன்றைய புத்துலகில், இந்தப்பண்பாட்டில் பழைமையைப் புதுப்பித்தல் என்றில்லாமல் ஒருவர் மெய்யுணர்வைப் பெற வேண்டும். ஏனெனில், புதுப்பிக்க விரும்புவது ஏற்கனவே புதையுண்டது. அதனை முயன்று புதுப்பித்து வணங்குவதில் பொருளில்லை. ஆனால் நாம் அதைத்தான் செய்து கொண்டிருக்கிறோம்.

நம் வாழ்வின் துயரத்துக்கான பதிலைக் காண முடியாதபோது, பழைமையின் நெடுந்தொலைவிலுள்ள ஒன்றுக்குத் திரும்பச் செல்கிறோம். அதனை நினைவு கூர்ந்து புதுப்பித்துக்கொள்ள முயல்கிறோம். நாகரிகத் தொடக்க காலத்தில் உருவாக்கப்பட்ட கோயில்களுக்கும் தேவாலயங்களுக்கும் திரும்பத்திரும்பச் சென்று தஞ்சமடைகிறோம். இதிலெல்லாம் பொருளேதுமில்லை.

ஆகவே, குறிப்பிட்ட சமயம் என்பதில்லாமல், இறையியல் மனம் அல்லது சமய மனம் (Religious mind) என்பதான ஒன்று

உள்ளதா என்பதை நமக்கு நாமே கண்டுபிடிக்க வேண்டும். அதனைக் கண்டறிவதற்குச் சமயப் போதகர்கள் கண்டுபிடித்துள்ள மீட்பர்கள், சடங்குகள், திரும்பத்திரும்ப ஓயாமல் ஒலிக்கப்படுகின்ற மந்திரச்சொற்கள் போன்ற அனைத்தையும் முற்றிலுமாகப் புறந்தள்ளிவிட்டுப் புதிதாத்தொடங்க வேண்டும். உண்மையைக் காண்பதற்கு இதுதான் ஒரே வழி.

அமைப்பு முறையிலுள்ள நம்பிக்கைகள், சடங்குகள், புனித நூல்கள் போன்றவற்றைப் பொருட்படுத்தாமல் விட வேண்டும். அவற்றில் எந்தப் பொருளும் இல்லை. பொருள் வாய்ந்தது எதுவெனில் போராட்டம், துயரம், நம்முடைய உடல், நெஞ்சம், மனம், நம்முடைய அன்றாட நடவடிக்கைக்கு அப்பால் செல்ல முடியாத நமது இயலாமை ஆகியவற்றுடன் கூடிய நமது வாழ்க்கையே.

நமது வாழ்க்கை குறுகிய எல்லைக்கு உட்பட்டது, மிகச்சிறியது. கால இடச்சூழ்நிலைகளாலும் அச்சவுணர்வுகள் போன்றவற்றாலும், சூழப்பட்டது. இதற்கு அப்பால் மனிதன் செல்ல முடியுமா? இதுதான் அடிப்படையான ஆய்வுப்பொருட்கள், கடவுள் உண்டா இல்லையா என்பதோ, கடவுள் நம்பிக்கை ஒருவர்க்கு உண்டா இல்லையா என்பதோ அல்ல.

ஜே. கிருஷ்ணமூர்த்தி கூறுகிறார் :-

"நீங்கள் கடவுளை நம்புகிறீர்களா நம்புவில்லையா என்பதில் எந்த முக்கியத்துவமும் இல்லை. உங்கள் கடவுள்நம்பிக்கை என்பது நீங்கள் வயக்கப்பட்டிருப்பதன் விளைபொருளேயாகும். நீங்கள் ஒரு முகம்மதியராக அல்லது கிறித்தவராக அல்லது இந்துவாகப் பிறந்திருந்தால், உங்கள் எண்ணங்களையும், நம்பிக்கைகளையும் வடிவமைக்கிறது.

"பொதுவுடைமைக் கோட்பாட்டுலகில் இவற்றையெல்லாம் அவர்கள் நம்புவதில்லை. நீங்கள் பேசுவதெல்லாம் அப்பட்டமான மடமை என்பார்கள். ஆகவே, மெய்யாகவே கண்டறிவதற்கு இந்த முட்டாள்தனத்தையெல்லாம் மருத்துவ அறுவை செய்து அப்புறப்படுத்த வேண்டும். சடங்குகள், இலத்தீன் மொழியிலோ,

சமசுகிருதத்திலோ செய்யப்படுகின்ற முணுமுணுப்புகளுடன் கூடிய சமயம் என்று சொல்லப்படுகின்ற அறியாத்தனத்தையெல்லாம் அகற்றிடவேண்டும்."

*மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்*
*ஆகுல நீர பிற.* *(குறல் 34)*

என்கிறார் வள்ளுவர். 'மனத்தில் களங்கம் இல்லாமையே சிறந்த அறம். மற்றவை ஆக்கக் கேடானவை' என்று இக்குறளுக்கு மதுரை இளங்குமரனார் பொருள் காண்கிறார். மனிதர்களைக் கட்டுப்படுத்திச் சிறைப்படுத்துகின்ற பல்வேறு சமயங்கள், சமயச்சடங்குகள், கோயில்கள், தேவாலயங்கள், புனித நூல்கள் போன்றவை யாவும் ஆக்கக்கேடானவை என்பது வள்ளுவம். இவற்றையெல்லாம் அறுவை மருத்துவம் செய்து அப்புறப்படுத்தவேண்டும் என்கிறார் கிருஷ்ணமூர்த்தி.

மனத்தில் மாசுள்ளதா என்பதை ஒவ்வொருவரும் தனக்குத்தானே கண்டறியவேண்டும். மனத்தில் படிந்துள்ள மாசு என்னென்ன? அழுக்காறு (பொறாமை), அவா, வெகுளி (சினம்), தீய சொற்களைச் சொல்லுதல் ஆகியவற்றை அறத்துக்குப் புறம்பான மாசு என்கிறார் வள்ளுவர்.

*அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்*
*இழுக்கா இயன்றது அறம்.* *(குறள் 35)*

'அறம்' என்று வள்ளுவர் குறிப்பிடுவது, உயிர்ச்சூழல் சிறப்பதற்குரிய நயன்மை ஆற்றல் என்று பொருள் கொள்ளலாம். இந்த நல்லாற்றல் மனித சமூகத்தில் வளர வேண்டுமாயின், ஒவ்வொரு மனித மனமும் மாசு நீங்கி மலர்ச்சி காணவேண்டும். என்னென்ன மாசு நம் அகத்தில் உள்ளது என்பதை நாமே கண்டறிய வேண்டும். அதற்கு நாம் நம் அகத்தை உற்றுப் பார்க்கவேண்டும்.

### அகத்தினுள் பார்வையைச் செலுத்துதல்

அகத்தினுள் பார்வையைச் செலுத்தவதற்கு முன்னர், நம் அன்றாட வாழ்க்கையை ஆராய்ந்து பார்க்கலாம். அதற்கு

உணர்வெழுச்சி (passion) தேவை. நம்மில் மிகச்சிலரே இந்த ஆற்றலைப் பெற்றிருக்கிறோம்.

இந்தப்புத்துலகில், கிட்டத்தட்ட ஒவ்வொன்றைக் குறித்தும் அமைதியை இழக்கிறோம். குடும்பத்தைப்பொறுத்து, நம் வேலையைப் பொறுத்து, எப்போதும் ஒரே மாதிரியாகவுள்ள வாழ்வின் நடைமுறை குறித்து, தனிமைப்படுவது குறித்து நமக்கு நிறைவின்மை (Discontent) ஏற்படுகிறது. இந்த நிறைவின்மையை அதன் உச்சநிலையில், எரிதழலாக இருக்குமாறு பார்த்துக் கொண்டால், அப்போது நம்மிடம் ஆற்றல் உயர் மட்டத்தில் இருப்புக்கொள்ளும். ஆனால், நாம் மிக எளிதாக மனநிறைவைப் பெற்றுக்கொள்கிறோம். மனநிறைவைப் பெறுவதற்காக ஏதேனும் ஓர் அமைப்பில் ஈடுபாடு கொள்கிறோம். சமூகச் சீர்திருத்தம், அரசியல் சீர்திருத்தம் அல்லது சமயச் சீர்திருத்தம் போன்ற ஒரு செயல்பாட்டை மேற்கொள்கிறோம்.

இவ்வாறான செயல்களில் ஈடுபடுவதற்கு மாறாக, ஒருவர் தன் அகத்தினுள் சென்று பார்க்கலாம். துறவிகள் தம் அகத்தினுள் செல்வதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், அவர்கள் அகத்தினுள் செல்வதே இல்லை. எளிய வாழ்வியலைக் கொண்டுள்ளவர்கள் தாம் அகத்தினுள் செல்லமுடியும். ஆனால், துறவிகள் எனப்படுவோர் எளிய வாழ்க்கைக்குரிய தோற்றத்தை மட்டும் கொண்டுள்ளார்கள். எளிமை அவர்களிடம் இருப்பதில்லை. கொள்கை, கோட்பாடு, நம்பிக்கை, அதிகாரம் போன்ற அனைத்திலிருந்தும் ஒருவர் விடுபட்டால்தான் அவர் எளிய வாழ்வைப் பெற்றவராவார். எளிமையுடன்தான் ஒருவர் தன் அகத்தினுள் செல்ல முடியும்.

அகத்தினுள் செல்வது மிகவும் கடினமானது. அதற்கு ஆற்றல் தேவை. ஒருவர் தனக்குள்ளாக ஆராய்ந்து பார்த்து இந்த ஆற்றலை, உள்நோக்கம் இல்லாத இந்த ஆற்றலைக் காண வேண்டும்.

### *புறத்திலிருந்து அகத்துக்கு*

எந்த ஒரு முரண்பாடும் இல்லாமல், எந்த ஓர் இலக்கையும் எதிர்நோக்காமல், வாழ்க்கையை எதிர்கொள்கின்ற எளிய

முறையைக் கண்டுகொள்ள வேண்டியுள்ளது. இதற்கு ஒருவர் தனக்குள் சென்று பார்க்க வேண்டும். புறச்செயல்பாடுகள் இல்லாமல் ஒருவர் தன் அகத்தினுள் செல்ல இயலாது. உலகையும் சமூகத்தையும் புரிந்து கொள்ளாமல், மனிதன் என்ற முறையில் உலகின் மீதுள்ள உறவை, சமூகத்தின் மீதுள்ள உறவைப் புரிந்து கொள்ளாமல் அகத்தினுள் செல்ல முடியாது. அது மிகவும் கடினமானது. வாழ்க்கையில் எதுவும் எளிதன்று. ஆனால், நம்மில் பெரும்பாலோர் விரைவான பதிலைப் பெற்றுவிட விரும்புகிறோம். உலகியலைப் புரிந்து கொள்ள இயலாத அருவமான ஒரு நிலையை (Extraordinary mystical stage) எய்திட விரும்புகிறோம். அது வெறும் மாயத்தோற்றமே என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

உள்முகமாகச் செல்வதற்கு, உள்ளுக்குள்ளே மிக ஆழமாகச் செல்வதற்கு, புறத்தை உற்றுப்பார்த்து நாம் புரிந்து கொள்ள வேண்டும். கடல் எழுச்சி (tide) வெளியில் செல்லும் போது, அதே நீர் உள்ளே வருவது போல் நாம் இயங்க வேண்டும். அதுவே உலகின் மீதுள்ள நமது உறவு. அதனைப் புரிந்து கொண்டு, அந்த நீரில் பயணம் செய்து, உள்முகமாக நகர வேண்டும்.

நேரடியாகத் துறவறம் பூணுதல் என்பது இயற்கைக்கு மாறானது. 'அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை' என்கிறார் வள்ளுவர். இல்லறத்தில் ஈடுபட்டு, அதன் தொடர்ச்சியாகத் துறவறத்துக்கு நகர்ந்து செல்ல வேண்டும். வள்ளுவரும், கிருஷ்ணமூர்த்தியும் மனித உலகுக்குக் காண்பிக்கின்ற வாழ்வியல் இது. வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதன் தொடர்ச்சியாகவே இறையியல் வாழ்வு இயன்று வரும்.

ஆற்றவிந்து அடங்கிய சான்றோர்களே மெய்யுணர்வு காண வல்லவராவர். 'ஒழுக்கத்துநீத்தார்' என்ற வள்ளுவச் சொற்றொடர் இங்குக் கருதிப்பார்க்கத் தக்கது. வாழ்வாங்கு வாழ்வதற்குரிய ஒழுக்கநெறியில் உறுதியாகத் தம்மை நிலை நிறுத்திக்கொண்டு, துறவு நிலை எய்தியவர்களின் பெருமையை, உயர்ந்த விழுப்பமெனப் போற்றுவது அறநூல்களின் துணிவு (குறள் 21) என்பார் வள்ளுவர்.

இயற்கையின் இந்த முறையைக் கண்டுகொள்ளாமல், துறவறத்துக்கு முந்துகின்ற நாட்டம் உடையவர்கள் கூடா ஒழுக்கத்திற்கு ஆட்பட்டு அல்லாடுகின்றனர். மெய்மையால் மேவப்பெறாமல் பொய்மையில் புகழிடம் காணும் இவர்களைக் கண்டிப்பதற்காகவே 'கூடா ஒழுக்கம்' என்றொரு தனியதிகாரத்தை வள்ளுவர் படைத்தளித்தார்.

ஆக, ஒருவரது உலகியல் உறவு, அவரது குடும்பத்துடன், அவருடைய மனைவி அல்லது கணவருடன், குழந்தைகளுடன் தொடர்கிறது. மனிதன் வாழுகின்ற உலகம் அது. நமது உறவு எந்த அடித்தளத்தில் உள்ளது என்பதை, நம்மை நாமே எமாற்றிக் கொள்ளாமல் காணவேண்டியுள்ளது.

"ஒருவர் தனக்கு மிக அருகிலுள்ள பொருளில் தொடங்கி, அங்கிருந்து தனது மனத்தை, தனது உண்மையான இருத்தலைக் காணவேண்டியுள்ளது. இது மிகவும் கடினமான காரியம். ஏனெனில், உணர்வு நிலையிலும் உணர்வற்ற நிலையிலும், நம்மிடம் அருவருக்கத்தக்க பொருள்கள் இருப்பதைக் காண்கிறோம். அவற்றை எதிர்கொள்ள முடியாமல், கோயில், தேவாலயம், படக்காட்சி என்று ஏற்பாடு செய்யப்படுகின்ற பல்வேறு கேளிக்கைகளை நாடிச்செல்கிறோம். கோயில், தேவாலயம் என்பதெல்லாம் கூட, ஏற்பாடு செய்யப்படும் கேளிக்கையே. ஒன்றை நேரில் எதிர்கொள்வதற்கு ஆற்றல் தேவைப்படுகிறது. பொருளல்லவற்றில் நாம் போராடிக்கொண்டிருப்பதால், நம்மிடம் ஆற்றலின் சேமிப்பு இருப்பதில்லை. நம்மில் பெரும்பாலானவர்கள் இவ்வாறுதான் செயல்படுகிறோம்" என்கிறார் கிருஷ்ணமூர்த்தி.

ஆக, ஒருவர் வெளியிலுள்ள பொருள்களில் தொடங்கி, வெளிப் பொருள்களில் விழிப்புணர்வு கொண்டு - மரம், செடி, கொடிகள், வறுமை, வறுமையின் காரணம், உள்ளது உள்ளபடியான மொத்தச் சமூக - பொருளியல் அமைப்பு போன்றவற்றில் விழிப்புணர்வு கொண்டு, அதன் தொடர்ச்சியாகத் தன் அகத்தினுள் செல்ல முடியும்.

நம்முடைய உணர்வெழுச்சி அல்லது ஆற்றலை வரவழைப்பதற்கு நாம் கருத்துச் செலுத்த வேண்டிய கூறுபாடுகள் பல உள. சரியான உணவை நாம் உட்கொள்ள வேண்டும். நாவுக்குச் சுவையானவை என்றில்லாமல், நம் உடலுக்குத் தேவை என்னென்ன என்பதை நாமே ஆராய்ந்து கண்டறிந்து, அவற்றை மட்டுமே அளவாக உட்கொள்ள வேண்டும்.

*மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்*
*ஊறுபாடு இல்லை உயிர்க்கு (குறள் - 945)*

என்பார் வள்ளுவர். நம் உடலின் இயல்புக்கும் தேவைக்கும் இடையே முரண்பாடு இல்லாத உணவு வகைகளைத் தெரிந்து கொண்டு, அவற்றையும் அளவுக்கு மீறி உண்ண நேர்வதை மறுத்தவாறு, அளவோடு உண்ணுகிற நெறியைக் கைக்கொண்டால், நம் உயிர்க்கு இடையூறுகள் ஏற்படா. உணர்வெழுச்சியாகிய ஆற்றல் நம்மிடம் குன்றாமல் இருப்பதற்கு இந்த உணவுப் பழக்கம் இன்றியமையாத தேவையாகும்.

இன்னொரு முக்கியக் கூறுபாடு, நாம் மற்றவர்க்குக் கீழ்ப்படிதல் என்ற தூண்டுதலைப் புரிந்து கொள்வதாகும். யாரிடமும் நாம் ஏன் கீழ்ப்படிய வேண்டும்? தொழில் நிலையத்தில் அல்லது அலுவலகத்தில் நம் மேலதிகாரியிடம் கீழ்ப்படிகிறோம். கீழ்ப்படிந்து நடக்காவிட்டால் நம் பதவியை நாம் இழக்க நேரிடலாம். மேலலுவலரை விடச் சிறிதே அதிகமாக நமது அறிவுப்புலனை (Intelligence) நாம் காண்பிக்க நேரிட்டாலும் நம் வேலையை நாம் இழக்க நேரிடலாம். அந்த வேலையைப் பெறப் பலர் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு அச்சம் உருவாக்கப்பட்டுள்ளது. ஆகவே நாம் கீழ்ப்படிந்து இணக்கமாக நடந்து கொள்கிறோம். நாம் ஒவ்வொருவரும் அதிகாரத்தையும் பதவியையும் செல்வாக்கான உயர்ந்த இடத்தையும் பெற்றிட முயன்றவாறு இருக்கிறோம். இந்த முயற்சியின் ஒரு வழிமுறையாகவே நாம் கீழ்ப்படிகிறோம். இதனால் நமது அறிவுப் புலன் சிறுமைக்கு உள்ளாகிறது. இதனை நாம் அவ்வளவாகப் பொருட்படுத்துவதில்லை.

நாம் கீழ்ப்படிகிறோம் என்றால்,அதிகாரத்தைப் பெற அவாவி நிற்கிறோம் என்பதுதானே பொருள்?

இனி, அடுத்த கூறுபாட்டைக் கருதிப் பார்ப்போம். நம்மை நாமே ஏமாற்றிக் கொள்கிறோம். நமக்கு நாமே முகமூடியை அணிந்து கொள்கிறோம். முகமூடி என்பது யாது?

தொழில் நுணுக்கத்தில் ஒருவர் திறமையும் தகுதியும் உடையவராக இருந்தால், அது அவர் அணிந்து கொள்கின்ற ஒருவித முகமூடியாகும். அந்த முகமூடியில் அவர் வாழ்கிறார். அந்த முகமூடிக்குப் பின்னால் இருப்பது எதுவென்று அவர் அறியமாட்டார். அவர் ஒரு முதல் தரமான பொறியாளராக இருக்கலாம். அதிகாரம் செலுத்துகின்ற பணித்துறையின் (Bureaucrate) தலைவராக இருக்கலாம். அது அவர் அணிகின்ற ஒருவித முகமூடியாகும். அந்த முகமூடி சமூகத்தில் மதிப்பு வாய்ந்ததாக ஆகிறது. சமூகம் அவரை வியத்தகு மனிதராக ஏற்றுக் கொள்கிறது. அந்த முகமூடியை அப்புறப்படுத்தினால், இப்போது அவர் மற்றவர்களைப் போன்றவரே.

ஏமாற்றை ஏற்படுத்துகின்ற ஆற்றல் எது என்பதை நாம் கொள்ள வேண்டும். ஏமாற்று என்பது எதுவெனில், நாம் மெய்யாகவே எப்படி இருக்கிறோம் என்பதைத் தெளிவாக அறியாமல் இருப்பதுதான்.

நம்மில் பெரும்பாலோர் ஏமாற்றிக் கொள்கின்ற முறையில் வாழ்ந்து வருகிறோம். நம்மிடம் பணம் இருந்தால், நம்மை நாமே மகிழ்வித்துக் கொண்டு, நாள்தோறும் அலுவலகம் சென்று கொண்டு, எதனையும் ஆராய்ந்து பார்க்காமல் மேலோட்டமாக வாழ்ந்து வருகிறோம்.ஒருவிதத்தில் இதுவும் ஏமாற்றிக் கொள்கிற செயல்தான். நாம் வெறும் சோற்றுப் பிண்டமாக வாழ்ந்து விடலாமா? மற்ற நிலைகளில், ஆழ்ந்த இருப்பில் வாழ வேண்டாமா? அவற்றையெல்லாம் மறுத்தொதுக்கினால், நம்மை நாமே ஏமாற்றிக் கொள்கிறோம் என்பதுதானே பொருள்?

ஆக, ஒருவர் தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்கிற ஆற்றலை அறிந்தவராதல் வேண்டும். வாழ்வில் ஓர் எல்லை என்றிராத போது,

எந்த ஓர் இலக்கையும் அடைய வேண்டும் என்று ஒருவர் விரும்பாத போது, உண்மையிலிருந்து உண்மைக்கு என்றவாறு இயங்குகின்ற நிலையில், ஏமாற்றிக் கொள்கின்ற செயல் முடிவுக்கு வந்து விடும்.

ஏமாற்றுதல் என்கின்ற தலையீடு இல்லாவிட்டால், ஒருவர் தனக்குள் உற்றுப் பார்க்க இயலும். ஒரு சொல் என்றில்லாமல், கடந்த காலத்து நினைவுகளால் அதனை நிலை மாற்றம் செய்யாமல், நாம் உற்றுப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்க முடிந்தால், நம்மிடம் அளவற்ற ஆற்றல் இருப்பதை அறிந்து கொள்வோம். ஏனெனில், தற்போதுள்ளபடி, விளக்கம் கூறுவதாலும், நாம் பார்ப்பதை விரும்புதல் அல்லது விரும்பாமை என்றவாறு நிலைமாற்றம் செய்வதாலும், நம்முடைய ஆற்றல் வீணாக்கப்படுகிறது.

ஆகவே இறையியல் மனம் என்பது எவ்வித ஏமாற்றும் இல்லாதது. எந்த ஓர் உயர்நிலையையும் தேடாதது, எவ்வித அதிகாரத்தையும் தேடிப் பெறுவதற்குரிய விருப்பமோ தூண்டுதலோ இல்லாதது. இறையியல் மனம் தனது குடுப்பத்தின் மீதுள்ள உறவையும், மொத்த மனித இனத்தின் மீதுள்ள உறவையும் அறிந்து கொள்ளக் கூடியது, அந்த நிலையில், அதனால் மிக ஆழமாகச் செல்ல முடியும்.

அறிவாற்றல் (Intellect) என்ற கருவியைப் பெற்றிருக்கிறோம் என்று சொல்லப்படுகிறது. ஆனால், கவனிப்பு என்ற கருவியும் நம்மிடம் உள்ளது. நம்மிடம் மறைந்துள்ள அச்ச உணர்வுகளையும், இதுவரை நோக்கப் பெறாமல், தேடிக் காணப் பெறாமல் உள்ள நம்முடைய விருப்பங்களையும் கவனிக்கின்ற ஆற்றல் நம்மிடம் உள்ளது.

ஓர் அறிவியலறிஞர் (Scientist) அளவிடற்கரிய ஆற்றலுடையவராக இருக்கிறார் என்பது குறித்து நாம் வியப்படைகிறோம். முதல்தரமான ஆய்வுக் கூடத்தினுள் சென்று பார்த்தால், அங்குள்ள அறிவியலறிஞர் விறுவிறுப்புடன் ஆற்றல் நிறைந்தவராக இயங்கிக் கொண்டிருப்பதைக் காணலாம். அவர் புறப் பொருள்களைக் கையாள்வதால், எதிர்ப்பு எதுவும்

இருப்பதில்லை. உண்மையிலிருந்து உண்மைக்கு என்றவாறு அவர் செயல்படுகிறார். கருத்தரங்கங்களிலோ ஊகங்கள் அல்லது கற்பனைகளிலோ அவர் ஈடுபடுவதில்லை. ஒவ்வொன்றையும் நுண்பெருக்கிக் கண்ணாடியில் கவனித்துப் பார்க்கின்ற அப்பழுக்கற்ற, தெளிவான பார்வையைச் செலுத்துகின்ற தொழில் நுணுக்கச் செயல்பாட்டாளர் அவர். ஆகவே அவர், அந்த இடத்தில் - ஆய்வுக் கூடத்தில் - அளவற்ற ஆற்றலுடன் இருக்கிறார். ஆய்வுக் கூடத்தை விட்டு அவர் வெளியில் வரட்டும். மற்ற ஒவ்வொருவரைப் போல, அவரும் கவலையுடையவராக, பதவிக்காகப் போராடுபவராக, போட்டியிடுகின்றவராக, தேசியவாதியாக சமயவாதியாக இருப்பார். அப்போது ஆற்றல் வீணாகிறது.

உற்றுக் காண்பதற்கு மனம் ஒட்டுமொத்த அமைதியில் வீற்றிருக்க வேண்டும். அறிவியலறிஞர் உருப்பெருக்கிக் கண்ணாடியில் உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தால், அவர் அமைதி நிலையிலிருந்து கவனிப்பவராக இருப்பார். அறிவுத் தொகுதியிலிருந்து கவனிப்பவராக இருக்க மாட்டார். அவர் காண்பதைப் பின்னர் அறிவுப் பகுதியாக நிலைமாற்றுவார், அப்போது, அங்கு செயல் உள்ளது. ஆனால், அமைதி நிலையிலிருந்து அவர் பார்க்கின்ற அந்த நேரம், ஒரு வினாடிக்கும் குறைவாக இருக்கலாம், அல்லது ஒரு மணி நேரம் நீடிக்கலாம். கவனிப்பதற்கு அதுதான் ஒரே வழி. 'ஓர்த்து உள்ளம் உள்ளது உணர்தல்' என்ற வள்ளுவரின் கூற்று இங்கு நினைவு கூரத் தக்கது.

ஆக, அமைதியான மனத்தைப் பெறுவதென்பது அறிவை விடுவிக்கின்ற செயலாக ஆகிறது. ஒருவர் பயிற்சி செய்து அமைதியான மனத்தை அடைய முடியாது. ஆனால், உற்றுப் பார்ப்பதற்கு அமைதி தேவை. நமது மனம் பிதற்றிக் கொண்டிருக்கும் போது கதிரவன் மறைகின்ற அழகுக் காட்சியை உற்றுக் காண இயலாது. நமது மனம் அளவிடற்கரிய அமைதியுடனும் முனைப்புடனும் இருக்கும் போதுதான், நாம் அதனை மொத்தமாகப் பார்க்க முடியும்.

நாம் கவனித்துப் பார்க்கும் போது, நமது மனம் அளவற்ற அமைதியுடன் எப்படி ஆகிறது என்பதை நாம் கண்டு

கொள்ளலாம். கவனத்தில் இருக்கும் போது, மனத்தை அமைதிப்படுத்துகின்ற தேவை எழாது. அமைதி நிலையிலிருந்து கவனிக்கின்ற மனம் ஓர் ஒழுங்கைத் தனக்குத் தானே உருவாக்கிக் கொள்கிறது.

அமைதியிலிருந்து நமது கவனிப்புதான் மன எழுச்சியாகிய ஆற்றல், அப்போது நம்முடைய அச்ச உணர்வுகளை நாம் கவனித்துப் பார்க்க முடியும். பெரும்பான்மையான மக்கள் மரணத்தைப் பற்றியும் வாழ்வின் வெறுமையைப் பொறுத்தும் திகிலடைகிறார்கள், எந்த அசைவும் இல்லாமல், அச்சத்துக்கு அப்பால் செல்ல முடியாமல், அதனைத் தவிர்க்க முயலாமல் அச்சத்தை ஒருவர் எதிர் கொள்ள வேண்டும். அதற்கப்பால் செல்வது, அதனை அடக்குவது போன்றவை யாவும் ஆற்றலை வீணடிக்கின்ற செயல்களாகும். அச்சத்தின் மொத்த இயக்கத்தையும் ஒருவர் கவனித்துப் பார்த்தால், அமைதியுடன் கூடிய அந்தக் கவனிப்பு, ஆற்றலைக் கொடுக்கும். அப்போது, அச்சம் என்ற சிக்கல் விலகி விடும்.

'கவனித்தல்' என்ற சொல்லை நாம் பயன்படுத்தும்போது, குற்றம் காணுதல் என்றில்லாத, நிறைவின்மையின் வெளிப்பாடு என்றில்லாத, உடன்படுதல் அல்லது வைத்தல் என்றில்லாத கவனிப்பு என்றே பொருள் கொள்கிறோம். அமைதி நிலையிலிருந்து கவனித்தல், உண்மையை மட்டும் கவனித்தல், உண்மையை நிலைமாற்றுவதோ, உண்மையைப் பற்றிக் கருத்துரைப்பதோ, இயலாத வெறும் கவனிப்பு. அப்போது, அந்தக் கவனிப்பை செயல்படுத்துவதற்கோ, அதனை எதிர்ப்பதற்கோ, அதனை வெல்வதற்கோ, எந்த முயற்சியும் இல்லாமல் அந்தக் கவனிப்பு அமைவுறும். முயற்சி என்பது அறவே இல்லாது ஆகிறது.

### இறையியல் மனம்

இறையியல் மனம் என்பது குடும்பத்தையும், அண்டத்தின் முழுமையைப் பொறுத்த அதன் இடத்தையும் அறிந்து கொள்வது. அதிகாரத்தையோ, பதவியையோ, தேடாதது; எந்தச் சடங்கிலும், கோட்பாட்டிலும், நம்பிக்கையிலும் அமைப்பு முறையிலுள்ள

கோயில் அல்லது தேவாலயத்திலும் இணையப் பெறாதது, மாயைதனை உண்டாக்குவதற்கு எந்த உரிமையும் இல்லாதது. உண்மையை உற்றுக் காண்பது எதுவோ அதுவே இறையியல் மனம். ஆகவே அது என்ன செய்தாலும் அங்கு முயற்சி என்பது அறவே இராது.

*பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற*
*செய்யாமை செய்யாமை நன்று (குறள் 297)*

என்ற வள்ளுவர் கூற்று இங்கு விளக்கம் பெறுவதைக் காண்கிறோம். 'அகந்தூய்மை வாய்மையால் காணப்படும்' என்பார் வள்ளுவர். வாய்மையிலிருந்து வாய்மை, உண்மையிலிருந்து உண்மை, என்றவாறு நாம் இயங்குகின்ற நிலையில் யாதொன்றையும் செய்திட வேண்டும் என்ற முயற்சி தேவையில்லாமல் ஆகிறது.

இந்த அமைதி நிலை, பரந்த வெளியாகிறது. மிகச் சிறிய வெளியில் நாம் வாழ்ந்து வருகிறோம். மனம் தன் கருத்துக்களால் உருவாக்கிக் கொண்டுள்ள சின்ன வெளியிது. இந்தச் சிறிய வெளி, ஒரு குறிப்பிட்ட சமூக அமைப்பில், பண்பாட்டில் மனம் வயக்குற்றதன் விளைவாக உருப் பெற்றுள்ளது. இந்தச் சிறிய வெளியில் மனம் வாழ்ந்து வருகிறது. போர்கள் அனைத்தும், நம்முடைய தொடர்புகள் யாவும் இந்தச் சின்ன வெளியில் ஏற்படுகின்ற உருவாக்கங்களே. ஆனால் கவனத்தின் மூலமாக, முயற்சி எதுவும் இல்லாமல் மனம் எப்போது இயல்பான முறையில் அமைதியுறுகிறதோ அந்தக் கணம், இந்தச் சிறிய வெளியின் சுற்று வட்டம் தகர்ந்து விடுகிறது. முழுமையான அமைதியில் மனம் வீற்றிருக்கும் அந்தக் கணத்தில்,அதன் பரந்த வெளிக்கு எந்த எல்லையும் இல்லை என்பதை நாம் காணலாம்.

மெய்யுணர்வு பெற்றவர்கள் இப்பரந்த வெளியில் திளைப்பர். அண்டத்தின் பகுதியாகிவிடும் இவர்களுக்கு இந்த மண்ணுலகை விட விண்ணுலகு மிக அருகில் உள்ளதாகத் தோன்றும் என்கிறார் வள்ளுவர்.

*ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்*
*வானம் நணிய துடைத்து (குறள் 353)*

அது நிகழும் போது, மெய்யாகவே மனம் இறையியல் மனமாகிறது. அந்த மனத்திலிருந்து செயல் பிறக்கிறது. அப்போது ஒருவர் மீவுயர் குடியுரிமை பெற்றவராகிறார் - எந்த ஒரு மடத்துக்கும் சென்றல்ல, துறவியாக ஆகியல்ல. அந்த முயற்சியற்ற கவனத்திலிருந்த செயல் பிறக்கிறது. கவனம் மற்றும் அமைதியின் மூலமாகப் பரந்த வெளி இருப்பதால், அங்கு வீற்றிருக்கிறது.

அன்பு உள்ளது - ஒவ்வொரு நாளும் மடிந்தவாறு. அன்பு நினைவன்று ; எண்ணமன்று ; காலத்தின் ஓர் அளவாக (duration) நீங்கிக் கொள்ளும் பொருளன்று. கவனத்தின் மூலம் ஒருவர், ஒவ்வொன்றின் தொடர்ச்சியைப் பொறுத்தும் மடிதல் வேண்டும். அப்போது உள்ளது அன்பு. அன்பினால் படைப்பு இயல்கிறது.

ஒரு நூலை வெறுமனே எழுதுகின்ற ஒருவர் அல்லது ஒரு சிறிய அவாவை நிறைவு செய்கின்ற ஒருவர் படைப்பாளியாகிவிட மாட்டார். படைப்பு மனிதனால் உருவாக்கப்படுகின்ற கட்டுமானம் அன்று, அதன் விளையயன் வெறும் கண்டுபிடிப்பேயாகும். படைப்பு என்பது காலமற்றது. நேற்று நாளை என்றில்லாதது, காலம் என்பதில்லாமல் வாழ்ந்து கொண்டுள்ளது, இருத்தலின் முழுச் சிக்கலையும் அறிந்து கொள்கின்ற நிலையில் ஒருவர் படைப்பை நோக்கி இயல்பாக வருவார்.

இவையெல்லாம் சேர்ந்ததே இறையியல் மனம். அப்போது அது படைப்பை அறிந்து கொள்ளும்; கணத்துக்குக் கணம் அது படைக்கின்ற நிலையில் இருக்கும்.

*தனிச் சிறப்புடைய* அந்த வெற்றிடத்திலிருந்து எப்போதும் அது செயல்பட்ட வண்ணம் உள்ளது.

ஒரு மத்தளம் தன்னுள் வெற்றிடமாக உள்ளது. அதனைத் தட்டும் போது சரியான தொனியை அது வழங்குகிறது. ஆனால், உள்ளே அது வெற்றிடமாக உள்ளது.

நம்முடைய மனம் ஒருபோதும் ஒருபோதும் வெற்றிடமாக இருப்பதில்லை. எப்போதும் நிரம்பிய நிலையிலேயே உள்ளது. அச்சுறுத்துகின்ற எண்ணங்கள், நினைவுகள், அவநம்பிக்கை போன்றவற்றின் ஒட்டு மொத்த ஓசையிலிருந்தே நமது செயல்

வெளிப்படுகிறது. ஆகவேதான் நமது செயல் துயரத்திற்கு இட்டுச் செல்கின்ற முரண்பாடாக விளங்குகிறது.

மொத்தத்தில் வெற்றிடமாகவுள்ள மனம் - கவனிப்பு, அமைதி, ஆகவே அன்பு, மரணம் பற்றிய முழுமையான அறிதல் என்கின்ற நிலையில் வெற்றிடமாகவுள்ள மனம் - படைக்கின்ற பாங்கில் மிளிரும். படைக்கின்ற மனம் எப்போதும் வெற்றிடமாகவே இருக்கும் அந்த வெற்றிடத்திலிருந்து அது செயல்படுகிறது, பேசுகிறது. ஆகவே எப்போதும் அது வாய்மையின் வயமாகவே இருக்கும், தனக்குள் ஒரு போதும் ஏமாற்றை, பொய்மையைக் கொண்டு வராது.

இத்தகு இறையியல் மனம்தான் உலகின் துயரங்களுக் கெல்லாம் காரணமாகின்ற சிக்கல்களைத் தீர்க்க வல்லது.

***பயன்பட்ட நூல்கள்***


1. Collected Works of J. Krishnamurti Vol. XV, copy right : Krishnamurti Foundation of America.

2. திருக்குறள் தெளிவுரை, டாக்டர் மு. வரதராசனார், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - 600 018.

3. திருக்குறள் கருத்துரை, இரா. இளங்குமரன், திருவள்ளுவர் தவச்சாலை, அல்லூர், திருச்சி - 620 101.

4. திருவள்ளுவர் அருளிய திருக்குறள் நுண்பொருளுரை, தமிழண்ணல், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை - 625 001.

# சுவடிகளில் அகத்தியர் நூல்கள்

*மொ. மருதமுத்து, எம்.ஏ., எம்.ஃபில்., எம்.எட்.,*

## *முன்னுரை*

தமிழின் தொன்மையைச் சங்ககாலத்திலிருந்து கணக்கிடுவது மரபாகும். முச்சங்கங்களைக் கொண்டு இலக்கணம், இலக்கியம் பல கண்டுள்ளது தமிழ்மொழி. முதற்சங்கத்தில் அகத்தியர் புலவராக இருந்து தமிழாய்ந்து 'அகத்தியம்' என்ற நூலைத் தந்ததாகக் கூறுவர். இந்நூல், தொல்காப்பியத்திற்கும் முன்னது என்று 'இறையனார் களவியலுரை' என்னும் நூல் கூறும். ஆகவே, அகத்தியர் என்ற பெயர் தமிழ் மற்றும் தமிழக வரலாற்றின் தொடக்ககாலத்திலிருந்தே பழகி வரும் பெயராகக் கருதலாம்.

## *அகத்தியர் வரலாறு*

அகத்தியர் என்ற பெயர்கொண்ட புலவர்களும், முனிவர்களும், சித்தர்களும், மருத்துவர்களும், பலராவர் என்பதை அறிஞர்கள் கூறுவர். பொதியமலை அகத்தியர் என்கிற குறுமுனியின் காலம் 16,000 B.C. என்றும் இவருக்குப் பிறகு கி.பி. 19ம் நூற்றாண்டு வரை 37-ற்கும் மேற்பட்ட அகத்தியர் வாழ்ந்திருந்தனர் என்றும் அ.சிதம்பரனார் அவர்கள் 'அகத்தியர் வரலாறு' என்ற தமது நூலில் கூறுவார். எனவே, அகத்தியர் ஒருவரே அல்லர் என்றும், பல்வேறு கால கட்டத்தில் பலரும் அகத்தியர் பெயரால் இருந்தனர் என்பதும் அறிய முடிகின்றது. இவர்கள் இயற்றிய நூல்கள் அகத்தியர் பெயரிலேயே அறிமுகம் ஆயின. ஆயின் அவை, முதல் அகத்தியர் செய்ததன்று. இன்றைக்கு நமக்குக் கிடைக்கும் தமிழ்மருத்துவமாகிய சித்த மருத்துவ நூல்கள் பல, அகத்தியர் பெயரிலேயே ஓலைச்சுவடிகளில் காணப்படுகின்றன. இந்நூல்கள் அகத்தியர் என்ற ஒருவரும் மற்றும் அவர் பெயரால் எழுந்த பலரும் பாடி வைத்தவை, அல்லது அவரது சீடர்களாலும், அவர்வழி வந்த சித்தர்களாலும் பாடி எழுதிவைக்கப் பெற்றவையாகக் கருதலாம். இந்நூல்களில்

அமைந்துள்ள யாப்பையும் மொழிநடையையும் ஆராய்ந்தால் இதற்கான காரணம் புலனாகும். சித்த மருத்துவ முறைகள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முற்பட்டவையாகும். தமிழ் மருத்துவமுறைக்குச் சிறப்புச் செய்தவர்கள் சித்தர் பெருமக்கள் ஆவர். இச்சித்தர்களில் பதினெண்மரைத் தொகுத்து இவர்கள் கண்ட மருத்துவமுறைக்குச் 'சித்த மருத்துவம்' எனப் பெயரிட்டனர். இச்சித்தர்களில் அகத்தியர் என்பவரை முதன்மையராகக் கொண்டு பதினெண்மரைப் பட்டியலிடுகின்றனர். அகத்தியர் பற்றியும் அவர் எழுதிய நூல்களைப் பற்றியும் சுவடிகளின்வழி இக்கட்டுரை ஆய்கின்றது.

### அகத்தியரின் பெயர்கள்

தமிழ் மருத்துவ முறையை வகுத்த பதினெண் சித்தர்களுள் தலையாயவர் அகத்தியர். இவருக்கு இப்பெயர் மட்டுமின்றி அகத்தீசர், குடமுனி, கும்பமுனி, குருமுனி, ஆதிமா முனிவன், குறுமுனி, தமிழ்முனி, பொதிகைநாதன், பொதிகை முனி என்ற பெயர்களுமுண்டு என்பதைச் சுவடிநூல்களிலிருந்து அறிய முடிகின்றது. மேலும், இவருக்குத் தட்சிணாமூர்த்தி என்ற பெயரும் உண்டு என்பதைச் சில சுவடிகளின் தலைப்பிலும் இறுதியிலும் அமைந்துவரும் குறிப்புகளிலிருந்து அறியமுடிகிறது.

அகத்தீயை மூலாதாரத்திலிருந்து எழுப்பி உள்ளொளி காணும் ஆற்றல் பெற்றமையால் இவரை ***அகத்தியர்*** எனவும், தன்னகத்தே ஈசனாகிய சிவபிரானை என்றும் உன்னியிருப்பதால் (உள்ளே வைத்து வணங்குவதால்) ***அகத்தீசர்*** எனவும் வழங்குவர். முனிவர்களுக் கெல்லாம் முதல்வனாக இவர் இருந்தபடியால் இவரை ஆதிகுருவாகக் கருதி ***ஆதிமா முனிவன்*** எனவும், *குருமுனி* எனவும், வடிவமைப்பின் காரணமாகக் *குறுமுனி* எனவும், சிவபிரானின் அருளால் இவர் தமிழை வளர்த்தமையால் *தமிழ் முனி* எனவும், பொதிகைமலையில் தங்கி வாழ்ந்தவராதலால் ***பொதிகைநாதன்*** மற்றும் ***பொதிகை முனி*** எனவும் பலபெயர்களில் சிறப்பித்து அழைக்கப்படுகின்றார்.

## பல்துறை அறிஞர்

அகத்தியர் வகுத்த தமிழ் மருத்துவமுறையாகிய சித்த மருத்துவத்தை 'அகத்தியர் மருத்துவமுறை' என்றும் கூறுவதுண்டு. இரும்பைத் தங்கமாக்குதல், இளமை குன்றாதிருக்க மருந்து, ஆயுள் நீட்டிப்புக்கு மருந்து என்ற அடிப்படை வாதத்தைக் கொண்ட இரசவாதத்துறையில் எழுந்த பல்வேறு சிந்தனைகளுக்கு மூலகுருவாக இருந்தவர் அகத்தியர் என்றால் மிகையாகாது. இவர், இரசவாதமட்டுமின்றி மருத்துவத்தை முன்னிறுத்திப் பல்வேறு மருந்து வகைகள் (இலேகியம், கற்பம், குடிநீர், குழம்பு, சூரணம், தயிலம், பற்பம்) செய்வதற்கான நூல்கள் பல இயற்றியிருப்பது குறிப்பிடத்தக்கது. மருத்துவத்தைக் கூறும்போது 'மணிமந்திர ஔடதம்' என்று குறிப்பிடுவது முன்னோர் மரபு. இதில் 'மணி' என்பது சோதிடத்தையும், 'மந்திரம்' என்பது மந்திரஒலி ஒலித்தலையும் மற்றும் மாந்திரிகத்தையும், 'ஔடதம்' என்பது உட்கொள்ளும் மருந்தையும் குறிக்கும். இதன் காரணமாகவே அகத்தியர் இரசவாதம் மட்டும் கூறாது, மருத்துவம், மந்திரம், மாந்திரீகம் ஆகியவற்றை நெறிப்படுத்திக் கொடுக்கும் யோகம் மற்றும் சோதிடம் வரை தன் நுண்மாண் நுழைபுலத்தால் பல்வேறு நூல்களைப் படைத்துள்ளதைக் காணலாம். இவர், ஆயுர்வேத சூத்திரங்களுக்கு விரிவுரை எழுதியிருப்பதை 'ஆதிமாமுனிவன் சொன்ன ஆயுரு வேதத்துள்ளே' என்ற பாடலடியின் மூலம் அறியலாம். தமிழ் மருத்துவநூல்களை அதிகமாக யாத்த பெருமை அகத்தியரையே சாரும். இவ்வாறு பல துறைகளிலும் இவர் நூல்கள் இயற்றியிருப்பதால் பல்துறை அறிஞராகவும் திகழ்ந்திருப்பதை அறிய முடிகின்றது.

## அகத்தியர் நூல்கள்

அகத்தியர் பெயரில் 1 பாடல் கொண்ட நூல் தொடங்கி, 12,000 பாடல்கள் கொண்ட நூல்கள் வரை ஏறத்தாழ 250-க்கும் மேற்பட்ட நூல்கள் ஓலைச்சுவடிகளில் காணப்படுகின்றன. அகத்தியர் பெயரில் ஆயிரம் பாடல்களுக்கு மேல் அமைந்த பெரிய நூல்களாக

அகத்தியர் பன்னீராயிரம் (12,000) அமுத கலைஞானம் 1200, ஆயுள்வேதம் 1200, இலக்க சௌமிய சாகரம் 1200, இலட்சண காவியம் 1000, இந்திரசாலத் திரட்டு 1200, ஞான காவியம் 1000, பரிபூரணம் 1200, பூரண காவியம் 1000,பெருநூல் காவியம் 1200, மாந்திரீகக் காவியம் 1000, வாத காவியம் 1000, வாத சௌமியம் 1200, வைத்திய காவியம் 1000 மற்றும் 1500 ஆகிய பல நூல்களும், சிறுநூல்களாக (200 பாடல்கள் முதல் 800 பாடல்கள் வரை) கர்ம காண்டம் 300, கரிசல் 300, கன்ம காண்டம் 300, குறுநூல் 600, கௌமதி நூல் 400, சாலநிகண்டு 200, சௌமிய சாகரம் 500, சௌமிய சாகரச் சுருக்கம் 300, தத்துவம் 300, திரிபுவனக் கண்ணாடி 325, தீட்சை 200, பரிபாசை 500, பரிபூரணம் 400, பூசாவிதி 200, பூரணசூத்திரம் 205 மற்றும், 216, வைத்திய இரத்தினச் சுருக்கம் 360, வைத்திய செந்தூரம் 300, வைத்தியவல்லாதி 600, ஏமதத்துவம் என்னும் பஞ்ச காவிய நிகண்டு 800, நயனவிதி 500 முதலிய பல நூல்களும், மிகவும் சிறு நூல்களாக (200 பாடல்களுக்குக் கீழ்) அவிழ்த சாரம் 60, உட்கரு சூத்திரம் 48, உபதேச ஞானம் 51, கருக்கிடை 65, கலைஞானம் 12,30 மற்றும் 120, சவுக்காரத் திறவுகோல் 12, சூத்திரம் 50, 100, மற்றும் 150, ஞானம் 1, 5, 30 மற்றும் 100, தண்டகம் 100, நிகண்டு 116, பின்னூல் 80, முப்பு 50, முன்னூல் 80, மெய்ச்சுருக்கம் 51 முதலிய பல நூல்களும் காணப்படுகின்றன.

### *அத்தியர் பெயரில் சுவடிகள் விவரம்*

தமிழ்நாட்டில் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள், சுவடி நூலகங்கள், அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள், அயல்நாடுகள் ஆகிய பல்வேறிடங்களில் அகத்தியர் பெயரில் சுவடிநூல்கள் காணப்படுகின்றன. இக்கட்டுரையாசிரியர்க்குக் கிடைத்த ஆய்வுத் தகவல்களின்படி, கீழ்க்கண்ட இடங்களில் அகத்தியர் பெயரில் கிடைக்கும் சுவடிகளின் எண்ணிக்கை ஏறத்தாழ 7000 - ற்கும் மேற்பட்டவையாகத் தெரியவருகின்றன.

| சுவடிகள் காணப்படும் நிறுவனம் மற்றும் இடங்கள் | சுவடிகளின் எண்ணிக்கை (ஏறத்தாழ) |
|---|---|
| 1. அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை | 1500 |
| 2. சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையம், சென்னை | 1000 |
| 3. அறிஞர் அண்ணா இந்திய மருத்துவக் கல்லூரி, (சித்த மருத்துவக் கல்லூரி) சென்னை | 500 |
| 4. சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர் | 400 |
| 5. தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் | 300 |
| 6. ஆசியவியல் நிறுவனம், சென்னை | 300 |
| 7. கேரளப்பல்கலைக்கழகம், திருவனந்தபுரம் | 200 |
| 8. இந்திய சித்த மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை | 200 |
| 9. சித்த மருத்துவக் கல்லூரி, பழனி | 150 |
| 10. அகத்தியர் வைத்திய சாலை, திருவத்திபுரம் | 100 |
| 11. பிரெஞ்சு இந்திய நிறுவனம், பாண்டிச்சேரி | 100 |
| 12. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை | 100 |
| 13. உ.வே. சாமிநாதையர் நூலகம், சென்னை | 50 |
| 14. மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை | 50 |
| 15. தமிழ் ஓலைச்சுவடிப் பாதுகாப்பு மையம், சென்னை | 50 |
| 16. தருமபுர ஆதீனம், தருமபுரம் | 40 |

| | |
|---|---|
| 17. திருவாவடுதுறை ஆதீனம் | 40 |
| 18. திருவாடுதுறை ஆதீனம், பேரூர், (கோவை) | 40 |
| 19. சங்கராசாரியார் மடம், காஞ்சிபுரம் | 30 |
| 20. கலைமகள் கல்வி நிலையம், ஈரோடு | 30 |
| 21. இறையியல் கல்லூரி, மதுரை | 30 |
| 22. மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை | 30 |
| 23. கௌமார மடம், துறையூர் | 25 |
| 24. கௌமார மடம், விருத்தாசலம் | 25 |

மேலும், சென்னை திருவான்மியூர் திரு. மீனாட்சி சுந்தரம் அவர்களிடம் சுமார் 75 சுவடிகளும், வைத்தீசுவரன் கோயில் சித்தரிடம் சுமார் 25 சுவடிகளும், அச்சிறுபாக்கம் முதலியார் மடத்தில் சுமார் 20 சுவடிகளும் இருப்பது அறிய வருகின்றது. இவை மட்டுமின்றித் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் தனியாரிடமும், தாமரை நூலகம் சென்னை, இரத்தின நாயகர் & சன்ஸ் போன்ற புத்தக வெளியீட்டாளர்களிடமும், இந்தியாவின் பல்வேறு மாநிலங்கள், பல்வேறு உலக நாடுகளிலுள்ள நூலகம் மற்றும் நிறுவனங்களிலும் அகத்தியர் பெயரில் சுவடிகள் காணப்படுகின்றன. ஆகவே அகத்தியர் பெயரில் மட்டுமே 7000-ற்கும் மேற்பட்ட சுவடிகள் காணப்படுகிறதென்றால் பிற சித்தர்களான அகப்பேய்ச்சித்தர், அழுகிணிச் சித்தர், இடைக்காட்டுச் சித்தர், இராசுத்தேவர் என்னும் யாகோபு, உரோமரிஷி, கமலமுனி, கருவூரார், காக புசுண்டர், குதம்பைச் சித்தர், கூர்மானந்தர், கொங்கணர், கோரக்கர், சங்கமுனிவர், சட்டைமுனி, சிவவாக்கியர், சுந்தரானந்தர், சூதமுனி, தட்சிணாமூர்த்தி, தன்வந்திரி, திருமூலர், திருவள்ளுவநாயனார், தேரையர், நந்தீசர், நாகமுனிவர், பாம்பாட்டிச் சித்தர், பிரமமுனி, புண்ணாக்குச் சித்தர், புலத்தியர், புலிப்பாணி முனிவர், போகர், மச்சமுனி, யூகிமுனி, வான்மீகர் முதலிய பல்வேறு

சித்தர்களின் பெயர்களில் பாடப்பட்டுள்ள சுவடிநூல்கள் ஆயிரம் ஆயிரமாகும். இவற்றுள் பல பதிப்பிக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன.

### *அகத்தியர் நூல்களில் அச்சாகாதவை*

மேற்கண்ட பல்வேறு நிறுவனங்களிலுள்ள அகத்தியர் பெயரிலான சுவடிநூல்களில் முழுமையும் நன்றாகவும் உள்ள சுவடிகள் ஏராளம், இவற்றில் இன்னும் பதிப்புகள் வராத சுவடிகளும் உள்ளன. ஒரே நூலின் பல்வேறு பாடவேறுபாடுகள் அடங்கிய சுவடிகளும் இதில் காணப்படுகின்றன. இவற்றைக் கண்டறிந்து ஆய்வு செய்து வெளியிடுவது சித்த மருத்துவப் பயன்பாட்டிற்குப் பயனுள்ளதாக அமையும். சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் பாதுகாக்கப்பெற்று வரும் சுவடிகளில் அச்சில் வராத அகத்தியர் நூல்களானவை :

| நூற்பெயர் | சுவடி எண்கள் |
|---|---|
| 1. அகத்தியர் 100 | - R. 9766, R. 10742 |
| 2. அகத்தியர் அறுசுவை நிகண்டு | - R. 948 (B) |
| 3. அகத்தியர் ஆறெழுத்தந்தாதி | - R. 1228 |
| 4. அகத்தியர் கலைஞானம் 120 | - R. 10537/ R. 10660(c) |
| 5. அகத்தியர் குறுநூல் 600 | - R. 10481 |
| 6. அகத்தியர் சால நிகண்டு 200 | - R. 7694 |
| 7. அகத்தியர் சிவ யோகம் 100 | - R. 7631 |
| 8. அகத்தியர் சௌமிய சாகரம் 500 | - R. 193(C) |
| 9. அகத்தியர் சௌமிய சாகரச் சுருக்கம் 300 | - R. 10815 |
| 10. அகத்தியர் ஞானம் 100 | - R. 10753 |

| | | |
|---|---|---|
| 11. | அகத்தியர் திரிபுவனக் கண்ணாடி 325 | - R. 7625 |
| 12. | அகத்தியர் தீட்சை 200 | - R. 10814 |
| 13. | அகத்தியர் பல திரட்டு | - R. 8868 (C) |
| 14. | அகத்தியர் பூரணசூத்திரம் 200 | - R. 10406 |
| 15. | அகத்தியர் மணிகண்ட கேரள சோதிடம் | - R. 7542 |

## அகத்தியர் அறுசுவை நிகண்டு

இந்நூல், பால், தேன், நெய், நல்லெண்ணெய், வெண்ணெய், தண்ணீர், மோர், பனம்பழம், பேரீச்சம்பழம், நன்னாரிப்பழம், முந்திரிப்பழம், பலாப்பழம், வாழைப்பழம், திராட்சைப் பழம், ஆகியவற்றின் குணங்களையும், அரைக்கீரை, ஆடாதொடை, இலந்தை, இலுப்பைப்பூ, கோதுமை, நாரத்தை, பருத்தி, பாலை, மாதுளை ஆகியவற்றின் குணங்களையும், இந்துப்பு, மண்ணுப்பு, கடல் உப்பு., கல்லுப்பு, வெண்காரம், நாகம், ஈயம், பித்தளை ஆகியவற்றின் குணங்களையும், சந்தனம், குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம், கோரோசனை, அரளி, சுக்கு, மிளகு, திப்பிலி, உள்ளி, சிறுநாவல், ஏலம், இலவங்கப்பட்டை, தாளிச பத்திரி, தும்பை, முருங்கை, சதகுப்பி, செம்புளிச்சை, பெருங்காயம், ஓமம், கஸ்தூரி, கருஞ்சீரகம், தாளகம்,. துத்தம் முதலானவற்றின் குணங்களையும் கூறுகிறது. இந்நூலுக்கு, 'சட்ரச நிகண்டு' என்ற பெயரும் உண்டு என்பதைப் பிறிதொரு சுவடியின்மூலம் அறியமுடிகின்றது. அறுசுவைகளான இனிப்பு, கசப்பு, காரம், புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு ஆகிய தன்மைகளைக் கொண்ட பொருள்களின் குணங்களை இந்நூல் மிகவும் விரிவாகப் பேசுகின்றது.

## அகத்தியர் மணிகண்ட கேரள சோதிடம்

இச்சுவடிநூல், சிறுசிதைவுடன், அமைந்தாலும் நூல் முழுமையாக அமைந்துள்ளது; 684 பாடல்களைப்பெற்றுள்ளது

சோதிட நூலாக அமைகிறது. இந்நூல், அரிஷ்ட காண்டம், நலம் தீங்கு காண்டம், அற்பாயுசு காண்டம், யோக காண்டம், பலாபலக் காண்டம், தீர்க்காயுசு காண்டம், பிரதியோகக் காண்டம், ஆயுள் காண்டம், பிரதி அரிஷ்ட காண்டம், தனக் காண்டம், ரோக காண்டம், புத்திர காண்டம், சகோதரக் காண்டம், மாதுரு காண்டம், பிதுரு காண்டம், களத்திரக் காண்டம், தானாதி காண்டம், திசைச் சக்கிர காண்டம், சக்கிர காண்டம், திசை பொசிப்பு மார்க்கக் காண்டம் என இருபது காண்டங்களைப் பெற்றுத் திகழ்கிறது. சோதிட ஆராய்ச்சியாளர்களுக்குப் பெரிதும் பயன்படக் கூடிய நூல் இது.

இது போன்று பதிப்பில் வராத பல்வேறு சுவடிகளையும் அறிஞர் பெருமக்கள் ஆய்ந்தும் பதிப்பித்தும் வெளியிட வேண்டும்.

**பதிப்பின் இன்றியமையாமை**

தமிழ் மருத்துவச் சுவடிகள் பல இன்னும் உரிய வகையில் அச்சிடப் படவில்லை. சுவடிகளில் பாடல்கள் செய்யுள் வடிவில் அமைந்துள்ளதால் இக்கால மருத்துவ மாணவர்களும் பொதுமக்களும் இவற்றைப் படித்தறிவதில் ஆர்வம் கொள்வதில்லை. இதே நிலையில் இன்னும் சில காலம் சென்றால் இத்தகைய நூல்கள் பல முழுவதுமாக அழிந்துவிடும். இதனால் தமிழுக்கும் தமிழ்ச் சமுதாயத்திற்கும் பேரிழப்பு உண்டாகும். மேலும், தமிழ் மருத்துவத்தின் தனிச்சிறப்பைப் பல்துறை அறிஞர்களும் அறிவியலாரும் அணுகி ஆராய வேண்டுமானால் பல, தமிழ் மருத்துவச் சுவடிகள் நல்ல முறையில் பதிப்பித்து வெளியிடப் படவேண்டும். இந்நூல்களை உரிய வகையில் பதிப்பித்து வெளியிடுவதன் மூலம் பல மருத்துவத் துறைசார்ந்த புதிய தகவல்கள் அல்லது அரிய செய்திகள் நமக்குப் புலனாகக் கூடும்.

***இலக்கிய வரலாற்றில் சுவடியியலின் இடம்***

இலக்கிய வரலாறு என்பது இலக்கியங்களாக வாழ்ந்து வருவன அல்லது வாழ்ந்து அழிந்தன போன்றவற்றை வெளிக்கொணரும் ஊடகமாகும். அகத்தியர் போன்றோர் பெயர்களில் போற்றி

வளர்க்கப் பெற்ற மருத்துவம், மந்திரம், மாந்தரீகம், சோதிடம் போன்ற துறைகள் இன்றும் சுவடியில் வாழ்ந்து வருகின்றன. தமிழிலக்கிய வரலாற்றில் இத்துறைகள் பற்றிய செய்திகள் இதுவரை இடம்பெறாமலிருப்பது வருத்தத்திற்குரியது. இத்தகைய ஊடகமான இலக்கியவரலாற்றில் மேற்சொன்ன துறைகள், அவற்றைத் தனதுள் பொதித்து வைத்திருக்கும் சுவடியியல்துறை பற்றிய செய்திகளும் இடம்பெற வேண்டும். அப்போதுதான் தமிழ் இலக்கிய வரலாறும், உலகத் தமிழ் இலக்கிய வரலாறும் முழுமை பெற்றதாகக் கருத முடியும். அச்சாகிய நூல்களை மட்டுமே வைத்து இலக்கிய வரலாறு எழுதுவது என்பது சிறுகுடையில் கதிரவனை மறைப்பதற்கு ஒப்பாகும்.

# மழலையர் நாடகம்

*தி. ரமா, எம்.ஏ., எம்.ஃபில்.,*

**நாடகத்தை வகைப்படுத்தல்**

தமிழ் இலக்கிய வளர்ச்சியில் நாடகம் தொன்றுதொட்டு இருந்துவருவது. நாடகம் இல்லாத இடம் இல்லை. தொல்காப்பியர் 'நாடக வழக்கினும்' என்பர். மணிவாசகர் 'நாடகத்தால் உன் அடியார்' என்பர். ஆதலால் நாடகம் என்பது தமிழருடைய வாழ்க்கையோடு தொடர்புடைய பகுதியாகும். அகப்பாடல்களைச் சங்கப் புலவர்கள் புலவர் கூற்றாகப் பாடாது அக நிகழ்ச்சிகளில் வருகின்ற மாந்தர் கூற்றாகவே பாடி இருக்கின்றனர். ஒவ்வொரு புலவரும் அகத்திணை மாந்தர் கூற்றைத் தன் கூற்றாகவே பாடியுள்ளனர். தமிழோடு இசைந்த ஒரு துறையே நாடகத்துறை. இயல், இசை, என்னும் இரண்டு தமிழும் விரவியது தமிழ் நாடகத்துறை. பன்னாளில் நாடகம் என்பது தனிப்பகுதியாகத் தழைத்துவிட்டது. இந்த நாடகத்துறை வளர்ந்த போது நாடக இலக்கியங்களை ஆராய்ச்சியாளர்கள் பலவகையாகப் பகுத்தனர். நாடகத்தில் இடம் பெறும் கதைகளை அடிப்படையாக வைத்துப் புராணநாடகம், வரலாற்று நாடகம், சமூக நாடகம் எனப் பிரித்தனர். இவ்வாறு அன்றி வசனநாடகம், செய்யுள் நாடகம், இசை நாடகம் என்று பகுப்பதும் உண்டு. நாடகங்களில் நடிக்கின்றவர்களை அடிப்படையாக வைத்து மழலையர் நாடகம், சிறுவர் நாடகம், பெரியோர் நாடகம், அமைச்சூர் நாடகம், (நாடக சங்கம் நடத்தல்) என்று பிரிப்பதும் உண்டு. இதில் மழலையர் நாடகம் என்பது ஏழு வயதுக்கு உட்பட்ட அல்லது ஐந்தாம் வகுப்பு முடிய படிக்கின்ற மாணாக்கர்கள் நடிக்கின்ற நாடகமாகும்.

நாடகத்தில் நடிக்கின்றவர்களுக்கு ஏற்ப நாடகக்கதையும், நிகழ்ச்சிகளும், வசனங்களும் அமையும். நடிப்பவர்களின் வயதுக்கு மீறிய வசனங்கள் அமைந்தால் நாடகம் வெற்றி பெறாது. மழலையர் நாடகங்கள் நடித்தற்குரியவை. அந்த நாடகங்கள் அச்சாகுமானால் அவற்றை மழலையர் படிக்குமாறு நாடகம் எழுதப்படல் வேண்டும். மழலையரை நம்பி நாடகம் எழுதுவதும் அவற்றை நூலாக ஆக்கி வெளியிடுவதும் மிகமிக இடர்ப்பாட்டைத் தரக்கூடியவை ; பொருள் வருவாயைத் தராது.

### நாடகக்கலை வளர்ச்சி

நாடகங்கள் தமிழ்மக்களின் வாழ்வையும், வளர்ச்சியையும் காட்டுகின்றன. இசை, நாடகம் என்பன ஒரு காலத்தில் விழாக்கால நிகழ்ச்சியாகச் சிறப்பு நிகழ்ச்சியாக விளங்கின. விழாக்களின் இறுதியிலும், நித்திய விழாக்களிலும், மக்களைக் கோயிலுக்கு வரவழைக்க நாடகம் ஊர் மந்தைகளிலும், கோயிலைச் சார்ந்த கலையரங்குகளிலும் நடைபெற்றன. கோயிலுக்குள்ளேயே தஞ்சைப் பெரியகோயிலில் இராசராசேசுவர நாடகம் நடைபெற்றது என்ற குறிப்பு இங்குச் சிந்திக்கத்தக்கது. பிற்கால ஆட்சியாளர் அந்த நாடகத்தை நிறுத்திச் 'சரபேந்திர பூபாலக் குறவஞ்சி' நாடகத்தை நடத்தலாயினர். நாடகம் மக்களின் பொழுது போக்காக வளர்ந்தது.

இன்று வானொலி, திரைப்படம் என்று கலை பரவும் வாயில்கள் பெருகியபோது நாடகம் நித்திய நிகழ்ச்சியாக மாறிவிட்டது. பல்வேறு நிறுவனங்கள் தொலைக்காட்சி நிலையங்களைத் தோற்றுவித்தமையால் அவற்றின் வருமானத்தைப் பெருக்க நாடகம் 'தொடர் நாடகம்' என்றும் 'ஒருநாள் நாடகம்' என்றும், நாடகங்கள் நடிக்கப்படுகின்றன. இதனால் நாடகம் மக்களைப் பிடித்து ஆட்டுகின்ற பேயாகி வருகின்றது. நாள்தோறும் நாள்முழுமையும் கண்ணுக்கு விருந்தாகக் காதுக்கு இனிமையாக மக்கள் தொடர் நாடகங்களைக் கண்டு இன்புறுகின்றனர்; இந்த நாடகங்கள் திரைப்படச் சாயம் பூசியவை. எனினும் இன்றும் பள்ளி விழாக்களிலும், கோயில் விழாக்களிலும், நாடகங்கள் நடப்பதற்குத் தடை இல்லை.

### பள்ளிக்கூடமும் நாடகமும்

பள்ளி நாடகங்கள், பள்ளிக்கூட விழாக்களில் நடைபெறுவன. இந்தியா விடுதலை பெறுவதற்கு முன் 'தசராவிழா'வின்போது பள்ளி மாணவர்களால் புராண நாடகங்கள் நடத்தப்பட்டன. இந்த நாடகங்களில் நடிப்பவர்கள் பாடுபவர்கள் அனைவரும் பள்ளிக்கூடப்பிள்ளைகளே ; இவற்றை இயக்குபவர்களும் நாடகத்தை நடத்துபவர்களும் ஆசிரியர்களே. இந்த நாடகத்தை மக்கள் திரளாக வந்து கண்டு மகிழ்வர். இன்று சமயத் தொடர்பான விழாக்களுக்கு நாடகம் நடத்துவது பள்ளிக்கூடங்களில் இல்லை. கல்வித்துறை, அரசுத்துறையானமையால் சமய விழாக்களைப் பள்ளி

கொண்டாடுவது நின்று போய்விட்டது. இன்று பள்ளி ஆண்டுவிழாக்களில் அல்லது பெற்றோர் தினங்களில் நாடகம் நடைபெறுகிறது. இந்த நாடகம் பெரும்பாலும் தொலைக்காட்சி நாடகங்களின் தாக்குதலுக்கு உள்ளாகி விட்டன. அல்லது அவை தொலைக்காட்சி நிகழ்ச்சியைச் சார்ந்தவையாகக் காணப்படுகின்றன. பள்ளி ஆசிரியர்கள் ஆண்டுவிழா நாடகங்களைத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் போல நடத்திக் காட்டுகின்றனர். இதைப்போல் செய்தலை மக்களும் கண்டு மகிழ்கின்றனர்.

### மழலையர் நாடகங்களின் நிலை

மழலையர் நிகழ்ச்சிகளில் நாடகங்கள் இடம் பெறுகின்றன. இவை சிரிப்பு நாடகங்கள். இவற்றில் தொடர்ச்சியான கதை அமைப்பும், கதைக்கருவும் காணப்படுவது இல்லை. இவற்றைப் பள்ளி ஆசிரியர்களே எழுதி மாணாக்கர்க்குப் பயிற்சியளித்து நாடகத்தைத் தயாரிக்கின்றனர்.
லையாற் பீடிக்க

பெற்ற யானை யொன்று பிளிறியது எத்துணைத் தொலைவு கட்கும்? 'ஆதிமூலமே' என்ற அக்கதறல் வேறு எங்கும் யாருக்கும் கேட்பினும் கேளாவிடினும் திருப்பாற் கடலில் அறிதுயில் அமர்ந்த தி பகவற்கு உடனடியாகக் கேட்டது. அப்பாற்கடலில் ஆதிசேடன் மீது கிடந்த இறைவன் காலடியில் அமர்ந்திருந்த எம்பெரும ட்டிக்கும் இக்குரல் எட்டிற்று. குரல் கேட்டும் அறிதுயில் தொடர்ந்தது திருமால் அசையவில்லை. குழந்தை வருந்தியழும் போது பத முதலில் ஓடி வருபவள் தாய்தான். இது உலக அனுபவம். இ ற்கையின் ஏற்பாடுகளை ஒட்டி நிகழ்வது. ஆதலால் ஆண்டவன் அறிது ல் கலையாமல் இருந்த நிலையில் பக்தனான கஜேந்திரன் கதறலை க் கேட்டு உலக மாதா பெருமாளிடம் விரைந்து முறையிட்டா . ஆயினும் 'கஜேந்திரனின் முறையீடு வலி மிகுதியால் உடனடியாக ஏற் ட்ட உணர்ச்சிப் பெருக்கா அன்றி அறிவோடு பட்ட பக்தி வ பாடா என்பதை இன்னும் சற்றுப் பொறுத்துப் பார்ப்போம்' என்று எண்ணிய பெருமாள் அறிதுயில் தொடர்ந்தார். 'எ நோய்க்கும் அந்நோய் தீர்க்கும் மருந்தனைய ஆதிமூலமே!' என்னும் முறையீடு மறுபடியும் கேட்டதும் துயிலையும் தேவி யயும் ஆதிசேடனையும் துறந்து சக்கரமேந்திய கரத்தனாய் வி

நாடகம் எழுதப்பட்டிருக்கிறது. இத்தகைய நாடகங்களை நீண்ட நேரம் நடத்த முடியாது ; ஆனால் இந்த நாடகங்கள் நகைச்சுவையாகவும், கருத்தை உணர்த்துவனவாகவும் காண்போர்க்கு மகிழ்ச்சியைத் தருமாறும் அமைகின்றன.

இந்த நாடகங்களில் ஏழு வயதிற்கு உட்பட்டு ஐந்தாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களே நடிக்கின்றனர். இவர்கள் நீண்ட வசனங்களை நெடு நேரத்துக்குப் பேசி நடிக்க முடியாது. ஆதலால் இத்தகைய சிறிய நாடகங்களே பள்ளிகளில் நடக்கின்றன ; நடத்தற்குத் தகுதியானவை.

## மழலையர் நாடக இயல்பு

தமிழ்நாடகம் எழுதுவோர் பள்ளிக்கூடங்களில் நடிக்கத்தக்க நாடகங்கள் பல எழுதி இருந்தாலும் அவை நடிக்கத்தக்கவையாக அமையவில்லை. இவை பல காட்சிகளையும், களங்களையும் உடையவை ; இவை நீண்ட நாடகங்கள் ; நகைச்சுவையற்றவை. தமிழ் எழுத்தாளர்கள் பலர் பாலர் நாடகங்கள் எழுதியுள்ளனர். அவை அச்சுப்புத்தகமாக விளங்கும் நாடகங்கள். மழலையர் பள்ளியில் நடிக்கும் நாடகங்கள் அனைத்தும் அந்த அந்தப் பள்ளி ஆசிரியர்களாலோ அல்லது அந்த ஊரைச் சார்ந்தவர்களாலோதாம் எழுதப்படுகின்றன. அல்லது புத்தகவடிவில் வந்த நாடகங்களைத் தங்கள் வசதிக்கேற்ப மாற்றித் திருத்திக் கொண்டு மழலையர் பள்ளியினர் மேடையேற்றுகின்றனர். மழலையர் நாடகங்களில் ஆங்கிலம் கலந்த நடைதான் நாடகப் பேச்சாக அமைவது பெருகிய வழக்கு.

மழலையர் பள்ளி நாடகங்களில் ஆறு அல்லது ஏழு காட்சிக்கு மேல் நாடகங்கள் அமைவது இல்லை. இந்த நாடகங்கள் சமூகச் சிக்கலை மையப்படுத்தியவை. எந்த நாடகத்திலும் சிக்கலான கதைக்கருவோ, பாத்திரப்படைப்போ இருக்குமாறு நாடக ஆக்கம் செய்வதில்லை. வெறும் நிகழ்ச்சிகளின் அடுக்கு அடுக்காகக் காட்சிகளை அமைத்து அதன் வழி மாணாக்கருக்கோ, பெற்றோருக்கோ அற உண்மையை வெளிப்படுத்துமாறு நாடகத்தை உருவாக்குகின்றனர். இவற்றில் பாட்டுகள் இடம் பெறுவதில்லை. காதல் காட்சி, காதல் பாட்டு ஆகியவனவும் அமைக்கப் படுவதில்லை.

இந்த மழலையர் நாடகங்களில் பாத்திரங்களின் எண்ணிக்கையும் குறைவு ; இதனால் நாடகப் பாத்திரங்களுக்கு அலங்காரம் செய்யும் பணியும் குறைவு ; செலவும் குறைவு ; நாடகம் நிகழ்த்தும் நிகழ்ச்சிகளிலும், காட்சிகளும் மிகுதியாக இருப்பது இல்லை. நாடகத்தில் வசனங்கள் எளிமையானவை யாகவும், பளிச்செனக் கருத்தை வெளிப்படுத்துவனவாகவும் அமையும். மழலையரைத் திரும்பத் திரும்பச் சொல்லிப் பேசவைத்து நாடகப் பயிற்சி அளிப்பர்.

தமிழகத்தில் ஆங்கிலவழிப் பள்ளிகள் தோன்றிய பின்னரே மழலையரைக் கொண்டு நாடகம் நடத்தும் பழக்கம் தோன்றியது. உதகமண்டலம், கொடைக்கானல் போன்ற பெரிய ஊர்களிலுள்ள கான்வென்ட் பள்ளிகளில் ஆங்கிலமொழி நாடகங்கள் நடத்தவதே மிகுதி. திருச்சி, மதுரை, காரைக்குடி போன்ற ஊர்களிலுள்ள ஆங்கில வழிப்பள்ளிகள் (கான்வென்ட்களில்) ஆங்கில நாடகங்களுடன் தமிழ் நாடகங்களையும் நிகழ்த்துகின்றன. தமிழில் மழலையர் நாடகங்கள் என்ற நாடக வகை, மழலையர் பள்ளிகளின் பெருக்கத்தாலேயே தோன்றி வளர்ச்சிபெற்று வருகிறது. இப்பள்ளிகளுக்குச் சிறந்த நாடகங்கள் நடிப்பதற்குக் கிடைப்பதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவற்றைப் பள்ளி நாடகங்கள் அல்லது மழலையர் நாடகங்கள் என்று வகைப்படுத்த இயலும். தமிழில் இந்த நாடக இலக்கியவகை தனிவகையாகப் பிரித்துக் கொள்ளப் பெற்றிருந்தாலும் ஆராய்ந்து பார்க்கின்ற அளவுக்கு நாடகங்களின் எண்ணிக்கை வளரவில்லை. உயர்நிலைப்பள்ளி வகுப்புகளுக்குரிய நாடகங்களே சிறுவர் நாடகங்கள் என்று இன்று மக்கள் வழக்கில் உள்ளன. இவை உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் மாணாக்கர்கள் நடிக்கத்தக்கவையேயாகும்.

***நாடக வளர்ச்சி***

மழலையர் நாடகங்கள் வளர்வதற்குப் பெற்றோர்களும், ஆசிரியர்களுமே அக்கறை செலுத்த வேண்டும். பெற்றோர்கள் தங்கள் மழலையருக்கு நூல்கள் வாங்கிக் கொடுப்பதில் (புத்தகம்) ஆர்வம் காட்டுவது கிடையாது. ஆங்கிலத்தில் மழலையருக்கு என்று தனி நூல்கள் வெளிவருகின்றன. கவிஞர் அழ. வள்ளியப்பா குழந்தை இலக்கியங்களைப் பெரிய அளவில் வளர்த்து இருந்தாலும் அவர் நாடகத்துறையில் மழலையருக்கு என்று தனிப்படைப்புகளை உருவாக்கவில்லை. அவர் மழலையருக்கான ஓசைப்பாட்டுகளை

நிறையப் பாடியிருக்கிறார். அவை மழலையருடைய வயதுக்கும் அறிவுக்கும் ஏற்றவை. மழலையர் நாடகம் என்பது எழுத்தாளர்களின் பார்வையில் படாதவை. ஆனால் ஆங்கிலவழிப் பள்ளி ஆசிரியர்களும் இத்தகைய நாடகங்களை எழுதிப் பள்ளிகளில் நடித்து வருகின்றனர். இவை நூலாக வெளிவருவதில்லை. அதனால் தான் இந்த நூல்கள் அன்றலர்ந்த மலர்களாகச் செடியிலேயே மலர்ந்து செடி அடியிலேயே வீழ்ந்து விடுகின்றன. இத்தகைய நாடகங்களைத் திரட்டித் தொகுத்த ஆய்வாளர் எவரேனும் வெளியிடுவாரேயானால் மேடைத் திறம் மிக்க மழலையர் நாடகம் கிட்டுவது உறுதி ; மழலையர் நாடக இலக்கிய வகை பெருகுவது திண்ணம்.

### *தனியார் மழலையர் பள்ளிகள்*

தமிழகத்தில் தொடக்கப் பள்ளிகளாகப் பல பள்ளிகள் உள்ளன. இவற்றில் பல தனிப்பட்டவர் நிருவாகத்தில் உள்ளன. ஒன்றியப் பள்ளிகளும், நகராட்சிப் பள்ளிகளும் ஆண்டுவிழாக் கொண்டாடுவதோ நாடகம் நடத்துவதோ பெரிதும் இல்லை. தனிப்பட்டவர்களின் தொடக்கப் பள்ளிகளில் ஆசிரியர்கள் சிரமம் எடுத்துக்கொண்டு நடனம், நாடகம் போன்றவற்றை மாணாக்கர்களுக்குப் பயிற்றுவித்து மேடை ஏற்றுகின்றனர். இதற்குப் பக்கவாத்தியங்களும் உண்டு. உள்ளூர் மக்களின் ஒத்துழைப்பும் அவர்களுக்குக் கிட்டுகிறது.

நாடக நிகழ்ச்சி மிக விரைவாகவும், விறுவிறுப்பாகவும் நடந்து முடிந்துவிடுகிறது. அதைக் காணும் மழலையரின் பெற்றோர்கள் அளவிலா மகிழ்ச்சி அடைகின்றனர். பள்ளி ஆசிரியர்கள் ஒலிப்பிழையின்றி ஒலிப்பு முறையோடு மெய்ப்பாடு தோன்றக் கைகளை உயர்த்தியும், ஏற்றியும், கண்களை அசைத்தும் நாடகத்தில் மழலையரை நடிக்க வைக்கின்றனர். நடிக்கும் மாணவர்கள், ஆசிரியர் (இயக்குநர்) சொல்லியாங்குப் பயின்று செவ்வனே நடிப்பர். இதனால் மேடையில் நடிக்கும் மழலையர் வசனங்களை மறந்துவிடுவது இல்லை. திரும்பத் திரும்பப் பயிற்சி இருப்பதால் மாணாக்கருக்கு நாடகத்தை நடிப்பது எளிமையாகிறது. தமிழறிஞர்கள் மழலையர்க்குரிய பாட்டுகளைப் படைப்பதில் ஆர்வம் காட்டுவது போல நாடகம், சிறுகதை புதினம் (நாவல்) போன்ற மழலையர் இலக்கியங்களையும் படைக்க வேண்டும்.

# கஜேந்திரன் மோட்சம்

*பேராசிரியர் ந. சுப்பிரமணியன்*

முன்பு ஒரு காலத்தில் ஒரு வனத்தில் வாழ்ந்துவந்த விலங்குகள் யாவற்றுள்ளும் வலிமையாலும், உருவத்தாலும் சிறந்து விளங்கிற்று ஒரு யானை. அஃது அரிக்கும் அஞ்சாதாயினும் அரிபக்தியில் நிகரற்று விளங்கிற்று. யாதானும் ஒரு தீங்கு உற்றக்கால், அவனன்றி யோரணுவும் அசையாதாதலின் அவனைச் சரண் புகுந்து உய்தல் ஒன்றே வழி என்றும், வினையாகிய விலங்கினின்றும் விடுபடுவதற்குப் பிரபத்திமார்க்கமே உதவும் என்றும் சலிப்பின்றி நம்பிற்று அவ்விலங்காகிய கஜேந்திரன்.

அவ்விலங்கு ஒரு நாள் நீர் வேட்கை தணிக்கும் பொருட்டு அண்மையில் ஓடிய ஆற்றின் கரையை அடைந்தது. கரையில் பின்னிரு கால்களையும் ஊன்றிக் கொண்டு துதிக்கையை நீட்டி நீர்முகந்து கொள்ள முயன்ற யானைக்கும் அடி சறுக்கிற்றாதலின் தன் நிலை தளர்ந்து சிறிது ஆற்றிற்குள்ளே புகுந்து விட்டது. அப்போது அவ்வாற்றின் உள்ளே கரந்திருந்த நெடும்புனலுள் வெல்லும் கரமொன்று கலிகாலனாக வந்து கஜேந்திரன் கால் ஒன்றினைத் தன் பற்களால் இறுகப் பற்றிக் கொண்டது. ஏதோ ஒன்று தன் காலினை அசைக்க மாட்டாமல் பற்றிக் கவ்விக் கொண்டதையுணர்ந்த யானை காலை உதறித் தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றது. முயற்சி வீணாயிற்று. 'முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா'* ஆதலின் யானையின் கால் மேலும் சிறிது முதலையின் வாயிற்குள் நழுவிற்று. நெடும்புனலுள் முதலையே வெல்லுமாதலின் யானைக்குக் காலை விடுவித்துக்கொள்ளும் வகையிலதாயிற்று. அஃது என் செய்யும்? உருவால் விலங்காயினும் அறிவால் பாகவதப் பண்புடைத் தாதலின், கஜேந்திரன், என்னினும் வலி மிக்கோன்பால் என் கால் சிக்கியது. இவ்வூறு நீங்க வழிவேறொன்றும் இல்லை ; காலை உதறியும் வாயாற் கதறியும்

---

** (எழுவாயில் திணை விரவி அஃறிணை வாய்பாடு கொண்டு பயனிலைநிற்றல் 'ஈண்டுவிடத்தக்கதை விடாமை' யாகிய இழிவு நோக்கி, என்று 'திணைபால் பொருள் பட' என்றத் தொடக்கத்த நன்னூற் பொதுவியற் சூத்திரத்திற்கு உரைத்த சங்கர நமசிவாயர் கூறினாரேனும் மூர்க்கரை அஃறிணையோடொப்பவே கருதினர் என்றும் உரைக்க)*

ஆவதொன்றுமில்லை. 'இதனின்றும் என்னை விடுவிப்பான் எனையாண்ட பெருமாள் ஒருவனே' என்று துணிந்து 'ஆதி மூலமே!' என்று குரலெலுப்பிப் பிளிறிற்று.

பூவுலகின்கண் ஏதோ ஒரு காட்டில் ஓர் ஆற்றங் கரையில் முதலையாற் பீடிக்கப்பெற்ற யானை யொன்று பிளிறியது எத்துனைத் தொலைவு கேட்கும்? 'ஆதிமூலமே' என்ற அக்கதறல் வேறு எங்கும் யாருக்கும் கேட்பினும் கேளாவிடினும் திருப்பாற் கடலில் அறிதுயில் அமர்ந்த ஆதி பகவற்கு உடனடியாகக் கேட்டது. அப்பாற்கடலில் ஆதிசேடன் மீது கிடந்த இறைவன் காலடியில் அமர்ந்திருந்த எம்பெருமாட்டிக்கும் இக்குரல் எட்டிற்று. குரல் கேட்டும் அறிதுயில் தொடர்ந்தது. திருமால் அசையவில்லை. குழந்தை வருந்தியழும் போது பதறி முதலில் ஓடி வருபவள் தாய்தான். இது உலக அனுபவம். இயற்கையின் ஏற்பாடுகளை ஒட்டி நிகழ்வது. ஆதலால் ஆண்டவன் அறிதுயில் கலையாமல் இருந்த நிலையில் பக்தனான கஜேந்திரன் கதறலைக் கேட்டு உலக மாதா பெருமாளிடம் விரைந்து முறையிட்டாள். ஆயினும் 'கஜேந்திரனின் முறையீடு வலி மிகுதியால் உடனடியாக ஏற்பட்ட உணர்ச்சிப் பெருக்கா அன்றி அறிவோடு பட்ட பக்தி வழிபாடா என்பதை இன்னும் சற்றுப் பொறுத்துப் பார்ப்போம்' என்று எண்ணிய பெருமாள் அறிதுயில் தொடர்ந்தார். 'எந்நோய்க்கும் அந்நோய் தீர்க்கும் மருந்தனைய ஆதிமூலமே!' என்னும் முறையீடு மறுபடியும் கேட்டதும் துயிலையும் தேவியையும் ஆதிசேடனையும் துறந்து சக்கரமேந்திய கரத்தனாய் விரைந்தனன் அண்டமெல்லாம் காக்கும் அண்ணல்.

காலைமீட்டுக் கொள்ள இயலாததால் நோவு பொறுக்க மாட்டாமல் மேலும் கஜேந்திரன் முறையிட்டுக் கதறியவண்ணம் இருந்தனன். இதையெல்லாம் சற்றுத் தொலைவிலிருந்து பார்த்த வண்ணமிருந்த கருடாழ்வான் பெருமாளை அணுகி 'சுவாமி! தங்களைத் தாங்கிச் செல்வதையே பணியாகக் கொண்ட அடியேனைப் புறக்கணித்து விட்டுப் புறப்பட்டீர்களே! நான் இதோ நிற்கிறேன்.......' என்று பணிந்து கூறினான். அவனுக்கு விடை இறுக்கவும் அவகாசமின்மையால் அவனைப் புறக்கணித்து விட்டு 'என்பக்தன் அழைக்கும் போது நான் விரைந்து செல்லற்கு உன் செலவு என் செல்கையை விஞ்சுமோ' என்று கூறி விலக்குவது போல் பெரிய திருவடியைப் பார்த்துவிட்டுத் தனது சொந்தத் திருவடியில் விரைந்து வருகிறார் கஜேந்திரன் அழைத்த ஆதிமூலம்.

இன்னொரு முறை அப்பிளிறல் தன் காதில் விழுந்ததும் 'இனி இந்நிலமையை முடித்து விட வேண்டும்' என்று கருதிய கடவுள் தன் கைச்சக்கராயுதத்தை விடுத்து முதலையின் உடலை இரு கூறாகப் பிளந்து கஜேந்திரனைக் காத்தார். நினைவினும் கடுகிவாராநின்ற முழுமுதல் தெய்வம் தன்னையே நம்பிய பக்தனுக்குத் தவறாது உதவுவதை விளக்கவந்த இவ்வரலாறு எண்ணிறந்த கடவுள் தத்துவக் கருந்துக்களை உள்ளடக்கியுள்ளது.

இக்கதை கூறுவோர் பெரும்பாலும் இறுதியில் உரைப்பது யாதெனில் 'முதலையின் வாயினின்றும் மீட்கப்பட்ட கஜேந்திரனுக்கு உடனடியாக 'வைகுந்த சாமீப்யமாகிய மோட்சம் அளிக்கப்பெற்றது' என்பது. ஆயினும் முதலைவாயினின்றும் தான் பக்தனைக் காத்த போது முதலையைச் சக்கரத்தாலும் யானையை இயற்கை விதியாலும் கொன்று அவ்விரண்டிற்குமே இவ்வுலக வாழ்க்கையை முடித்து விட்டதாகக் கூறுதல் சிறிது பொருந்தாது என்க. மீட்கப்பெற்ற கஜேந்திரன் இப்பூவுலகில் தீங்கின்றி நெடிது காலம் வாழ அருள் புரிந்ததாகக் கூறுவதே நன்னெறி என்று தோன்றுகிறது. இவ்வாறு கூற வேண்டுமாயின் 'கஜேந்திரன் மோட்சம்' என்னும் தொடரிற் காணும் இரண்டாவது சொல்லிற்கு 'முதலையினின்றும் விடுபடுகை' என்றே பொருள் கொள்ள வேண்டும். மோட்சம், வீடு, விடுபடுதல் - இவை ஒரு பொருளன. இது உலகியற் பாசங்களிலிருந்து விடுபடுதல் என்றுதான் பொருள் படவேண்டும் என்பதில்லை. அப்போது நேர்ந்த ஆபத்தினின்றும் விடுபடுதலாகிய 'வீடு' என்றும் பொருள்படலாம். இக்கதை சுருக்கமாக ஆயினும் உருக்கமாக உரைக்கும் பான்மை போற்றற்குரியது.

மற்று, முதலையின் கதி யாதாயிற்று? அது இறந்துபட்டது என்று கூறி அதன் கதையை முடித்துவிடுதல் நேரிதன்று. அதற்கும் வீடு பேறு கிட்டிற்று என்பது ஒருதலை. அவ் வீடுபேறு யாதெனில், பிற உயிர்களைத் துன்புறுத்தித்தான் வாழ்ந்து வந்த இழிந்த நிலையினின்றும் அது விடுதலை பெற்ற வீடுபேறு அதற்குரியதாயிற்று என்பது. துன்பத்தினின்றும் நீங்கி அமைதிபெறுதல் ஒருவகை வீடு பேறு எனில் தீப்பண்புகளினின்றும், நீங்கிப் போதலும் ஒருவகை வீடுபேறே எனல் வேண்டும். இறைவன் இஷ்டனைப் பரிபாலித்து ஆட்கொள்ளுவது போல் துஷ்டனையும் பரிபாலித்து ஆட்கொள்ளுகிறான் என்பது இக்கதையின் உட்கரு எனல் பொருந்துமாறு காண்க.

# குறிஞ்சிச் சிந்தனை

*ஆம்பூர், புலவர் சி. பாண்டுரங்கன்*

குறிஞ்சி என்னும் சொல், தாவரவகை, நிலவகை, திணை வகை, பண்வகை ஆகிய வெவ்வேறு பொருள்களில் ஆளப்படுகிறது. குறிஞ்சிபற்றிய சிந்தனை, தொல்காப்பியர் காலத்துக்கும் முற்பட்டது என்பதனை,

*"மாயோன் மேய காடு உறை உலகமும்,*
*சேயோன் மேய மைவரை உலகமும்,*
*வேந்தன் மேய மைவரை உலகமும்,*
*வருணன் மேய பெருமணல் உலகமும்,*
*முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், எனச்*
*சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே" - எனவும்*

*"குறிஞ்சி,*
*கூதிர், யாமம் என்மனார் புலவர்"*

எனவும் வரும் தொல்காப்பிய நூற்பாக்கள் படம் பிடித்துக் காட்டுகின்றன.

**குறிஞ்சி மலர் :**

இயற்கையில் எத்தனையோ அதிசயங்கள் உள்ளன. தாழிப்பனையில் அறுபது முதல் நூறாண்டுகளுக்கொருமுறை பூத்துக்காய்க்கும் வகை உள்ளதாம். பன்னிரண்டு ஆண்டுகளுக்கொருமுறை மட்டுமே பழுக்கும் நாவல் பற்றி மணிமேகலைக் காப்பியத்தில் குறிப்பு உள்ளது.

*"சீர்திகழ் நாவலிற் றிப்பிய மானது*
*ஈரா றாண்டி லொருகனி தருவது*
*அக்கனி யுண்டோ ராறீ ராண்டு*
*மக்க ளியாக்கையின் வரும்பசி நீங்குவர்"*

\- மணிமேகலை

ஆனால், பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மலர்கின்ற குறிஞ்சிவகை உள்ளது என்பது பலரும் அறிந்த உண்மை!

பன்னிரண்டு என்னும் எண் நெடுங்காலமாகவே பலதுறையிலும் முக்கிய இடம் பெற்றுள்ளது. அகத்தியரின் மாணாக்கர் எண்ணிக்கை, இராசிகள், ஆண்டின்மாதங்கள், ஒரு கலத்தின் மரக்கால் அளவை, மெய்கண்டார் இயற்றிய சிவஞான போதத்தின் சூத்திரங்கள், சைவத் திருமுறைகள் ஆகிய ஒவ்வொன்றும் பன்னிரண்டுதான். மகாமகம் திருவிழா மற்றும் திருமுழுக்குப் பெருவிழா நடத்தும் ஆண்டு இடைவெளி பன்னிரண்டு. ஓரினக் குறிஞ்சி, மலரத் தொடங்கும் ஆண்டு இடைவெளியும் பன்னிரண்டுதான்! இத்தகைய கால இடைவெளியில், குறிஞ்சி பூக்கத் தொடங்குவதைப் பலரும் அறிவர்.

சங்ககாலந் தொடங்கி மக்கள் கவனத்தை ஈர்த்து வரும் பெருமை குறிஞ்சிச் செடிக்கு உண்டு. குறிப்பிட்ட ஆண்டுகளின் இடைவெளியில் பூக்கின்ற இதன் இயல்புதான், முதன்மையான காரணம்.

*"இயற்கைக் கடிகாரம் போலக் குறிஞ்சி*
*நயமாகப் பூக்கும் நலம்." -சி.பா.*

குறிஞ்சிச் செடி பற்றி, நற்றிணை முதல் புறநானூறு வரை, பலவற்றிலும் குறிப்புகள் காணப்படுகின்றன. குறிஞ்சிப்பூவில் கிடைக்கும் தேன் மிகச்சிறந்ததெனக் கருதினர்.

....."கருங்காற் குறிஞ்சி மதன் இல்வான்பூ, ஓவுக் கண்டன்ன இல்வரை இழைத்த நாறுகொள் பிரசம் ஊறு நாடற்கு......." எனவரும் நற்றிணைப் பாடல்வரிகள் இவ்வுண்மையை உணர்த்துவன. குறிஞ்சி பூக்குங் காலத்து, மலைச்சாரல் எங்கும் பூத்து, தேன் நிரம்பியிருக்கும். எனவே, தேனீக்கள், பெரிய தேனடைகளை, குறிஞ்சித் தேனால் நிரப்பும். அறிவியல் அறிஞர்கள் ஒரு பொருளின் நிறம், அளவு இயல்பு முதலான பலவற்றையும் ஆய்வர். இத்தகைய ஆய்வு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தொடங்கி விட்டது.

(முடமோசியார் புறநானூறு 374) " கருங்கோற்குறிஞ்சி அடுக்கம் பாட" முற்பட்டதே சான்றாகும். மேலும் பிசிராந்தையாரின், "......பெயர்குவை, கருங்கோற் குறிஞ்சி நும் உறைவு இன் ஊர்க்கே" என்னும் (அகநானூறு) பாடல் வரிகளும் நிற ஆய்வை உட்கொண்டவையே.

## குறிஞ்சி நிலம் :

கடல் மட்டத்திலிருந்து ஓரிடம் எவ்வளவு உயரத்திலுள்ளது எனக் கண்டறியும் கருவிகள் உருவாக்கப்படாத அக்காலத்தில் சுமார் ஆயிரம் மீட்டர் மற்றும் அதற்கு மேற்பட்ட உயரத்தில் மட்டுமே வளரக்கூடிய ஒரு செடியை இனம் கண்டனர் நம் முன்னோர். எனவே, மலையும், மலைசார்ந்த பகுதியும் ஆகிய நிலவகையைக் குறிக்க, அச்செடியின் பெயராகிய 'குறிஞ்சி' என்பதையே வழங்கினர். எனவே, இப்பெயர் சூட்டியது, அவர்தம் நுண்மாண் நுழைபுலத்தை உணர்த்துகிறது. (தொல்காப்பியர், குறிஞ்சி நிலத்தை, "சேயோன் மேய மைவரை உலகம்" என்று பொருளதிகாரத்தில் சுட்டுகிறார்)

## குறிஞ்சி நிலக் காட்சி :

குறிஞ்சி நிலக் காட்சிகள், மனம் கவர்வன, மகிழ்வூட்டுவன. இதில் திளைத்த எத்தனையோ புலவர்கள், தாம் கண்ட காட்சியை, ஏடாகிய திரையில், எழுத்தோவியமாக்கி, இலக்கணச் சட்டத்திலடங்கிய இலக்கியக் கண்ணாடியில் வைத்தனர். அவருள் ஒருவர் கபிலர். அவர் பாடலில் ஒரு பகுதி மட்டும் சுவைப்போம்.

மலைப்பகுதியில் ஓங்கி உயர்ந்த மூங்கில்கள் அசைந்தாடி உரசுகின்றன. அதனால் மூங்கிலில் துளை விழுகிறது. அங்கு வீசும் காற்று அத்துளையில் புகுவதால், புல்லாங்குழல் இசைக்கிறது. பனிபோல் குளிர்ந்த நீர் அருவியாகக் கொட்டுகிறது. அது எழுப்பும் இன்னிசை, தொகுதியான முழவுகள் எழுப்பும் இன்னிசை போல் உள்ளது. கூட்டமான கலைமான்களின் குரல் பாட்டு ஒலியாக ஒலிக்கின்றது. பூக்கள் நிரம்பிய மலைச்சாரலின் வண்டுகள் செய்யும் ஒலி யாழ் ஒலியாக இசை கூட்டுகிறது. இந்த இன்னிசைச் சங்கமத்தைக் கேட்டு, மகிழ்ந்த, அழகு மயில் தன் கோலத் தோகையை விரித்து ஆடுகிறது. இந்தக் கூத்தும் இசையும் கண்டும் கேட்டும் மகிழ அவையினர் வேண்டுமல்லவா? பெண் குரங்குகள் நல்ல அவையினராகத் திகழ்ந்து இவற்றைக் கண்டும் கேட்டும் மகிழ்கின்றன.

*"ஆடு அமைக்குயின்ற அவிர்துளை மருங்கின்*
*கோடை அவ்வளி குழலிசை ஆக,*
*பாடு இன்அருவிப் பனிநீர் இன்இசை*
*தோடுஅமை முழவின் துதைகுரல் ஆக,*

*கணக்கலை இருக்கும் கடுங்குரல் தூம்பொடு,*
*மலைப்பூஞ் சாரல் வண்டு யாழ்ஆக,*
*இன்பல் இமிழ்இசை கேட்டு, கலிசிறந்து,*
*மந்தி நல்அவை மருள்வன நோக்க,*
*கழைவளர் அடுக்கத்து, இயலி ஆடுமயில்......"*

- அகநானூறு

குறிஞ்சியைப் பாடுவதில் கபிலருக்கு நிகர் கபிலரே!

### *குறிஞ்சி இன்பம் :*

உலகிலுள்ள பல்லாயிரக்கணக்கான மொழிகளில், உயர்தனிச் செம்மொழியாக விளங்கும் தமிழின் தனிச்சிறப்புகளில் ஒன்று, வாழ்வியல் நெறிகளை வகுத்துக்காட்டுகின்ற பொருள் இலக்கணத்தைத் தன்னகத்தே கொண்டு விளங்குவதுதான். இது அகப்பொருள், புறப்பொருள் என இரு வகைப்படும். காதல்வாழ்வு பற்றியதாகிய அகத்திணைகளில் ஒன்று, குறிஞ்சித்திணை. "ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர் கண்டு, உள்ளம் கலந்து உறவு கொள்ளும் ஒழுக்கம்" என்று குறிஞ்சித் திணைக்கு இலக்கணம் சுட்டப்படுகிறது.

இனி, இத்திணை பொருந்த அமைந்த ஒரு பாடலில், அன்பின் சிறப்பினைக் காண்போம். தலைவன் தன்னுடன் கொண்டுள்ள நட்பின் சிறப்பைத் தலைவி, தன் தோழிக்குக் கூறுகிறாள். (குறுந்தொகை : மலைச்சாரலில், கரிய தண்டுகளை உடைய குறிஞ்சிப் பூந்தேனால் பெரிய தேனடைகளைத் தேனீக்கள் அமைக்கும் வளநாடனொடு கொண்ட நட்பு, நிலத்தை விடப் பெரியது, கடலைவிட ஆழ்ந்தகன்றது, வானைவிட உயர்ந்தது! நெல்லிக் கனியைத்தின்று, நீர்குடிக்கும் போது சுவை தருவது போல, குறிஞ்சித்திணைப் பாடல்கள் படித்தவர்க்கு நினைக்கும் போது சுவை தருவன.

பாண்டியன் உக்கிரப்பெருவழுதியாரின் அன்பு வேண்டுகோளை ஏற்று, அகநானூற்றைத் தொகுத்த உருத்திரசன்மர், குறிஞ்சித்திணைப் பாடல்களை, இரண்டு அல்லது எட்டு என முடியும் எண்ணிக்கை கொண்ட பாடல்களாக அமைத்துள்ள நயம் ஈண்டு எண்ணி மகிழ்தற்குரியது.

அன்பு அச்சகம், மதுரை-1. ✆ 741116